www.padippakam.com



விலை ரூ. 3-00 LICENCE No. TN/MS(N) WPP-100

# ஈழ சுதந்திரன்
## ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
௨0௨௯
சித்திரை-வைகாசி
மே-1998
புத்தகம்: 1¹ இதழ்: 6

∴ அமெரிக்க அதிபரின் தூதர் கொழும்பில் சொன்னதன் பொருள் என்ன?

∴ சிறிலங்கா அரசின் தூதர் ஜெனிவாவில் கூறியதன் அர்த்தம் என்ன?

∴ இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் முடிவு பெறுமா?

# இந்திய-தமிழக அரசுகளின் நடவடிக்கையை எதிர்பார்க்கிறது உலகம்

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் தூதர் பில் ரிச்சர்ட்சன் அவர்கள் தனது தென் கிழக்கு ஆசிய நாடுகளின் சுற்றுப் பயணத்தின் கடைசிக் கட்டமாக இலங்கைக்குச் சென்றிருந்த இடத்தில் விடுதலைப் புலிகள் சண்டையை நிறுத்திவிட்டு சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட வேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

சிறீலங்கா அரசு அதிகாரங்களைப் பரவலாக்கி வருகிறது என்றும், சரியான பாதையில் நடக்கத் தொடங்கியிருக்கிறது என்றும், எதிர்த் தரப்பில் விடுதலைப் புலிகள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை என்றும், அவர்கள் தேவையில்லாத செயல்களைச் செய்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### தெற்காசியாவின் முக்கியத்துவம்

ஆனால், தான் தமிழர் பிரச்சினையில் சமரசம் செய்ய வரவில்லை என்றும், அதே வேளை போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரி கா உதவத் தயார் என்றும், அது எந்த உதவியாகவும் இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

அத்துடன் கடந்த காலங்களில் தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்கு அமெரிக்கா போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும், இப்போது தொழில், பொருளாதாரம், முதலீடுகளில் இப்பகுதியின் முக்கியத்துவத்தை உணர்வதாகவும் குறிப்பிட்டு விட்டு, இலங்கை இனப்பிரச்சினைக்கு அமெரிக்கா உதவ வேண்டும் என்றால் எல்லாத் தரப்பினரும் கோரிக்கை வைக்க வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் இந்தியப் பிரதமரின் நிலையைத் தான் ஆதரிப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

இதன் எதிரொலியாகவோ என்னவோ தெரியவில்லை.

15-4.98 அன்று ஜெனீவா நகரில் நடந்த அமெரிக்க மனித உரிமை ஆணையத்தின் கூட்டத்தில் சிறீலங்கா அரசின் சார்பில் கலந்து கொண்ட எச். எம். ஜி. எஸ். பலிஹக்ரா, விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஓர் இடையூறாக இருக்காது என்று கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் என்ற பயத்தில் இலங்கை மக்கள் இருப்பதை அரசு விரும்பவில்லை என்றும், இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என்பதில் சிறீலங்கா அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்றும், வன்முறைப் போக்கை புலிகள் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தமது அரசு தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்ட அவர், புலிகள் தங்களது படையில் சிறுவர்களைக் கட்டாயப்படுத்திச் சேர்க்கும் நிலை உள்ளது என்றும் இதைத்தடுக்கும் வகையிலான சிறப்புத்திட்டத்தை சிறீலங்கா அரசு மே மாதம் தொடங்க உள்ளது என்றும், கூறிவிட்டு பச்சைப் பொய் ஒன்றைக் கூச்சமின்றி அங்கு கூறியுள்ளார்.

### உண்மை கலவாத பச்சைப் பொய்

வன்னிப் பிராந்தியத்தில் உணவுப் பொருள் விநியோகத்தை சிறீலங்கா அரசு நிறுத்திவிட்டது என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படும் புகார் உண்மைக்கு மாறானது என்று கூறிவிட்டு, குறிப்பிட்ட பகுதியில் உணவுப் பொருள்கள் போதிய அளவுக்குக் கையிருப்பில் உள்ளன என்று உண்மைக் கலப்பே இல்லாத பொய் மூட்டையை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

இந்திய அரசின் தொடர்ந்த கரிசனையினாலும், புதிய இந்திய அரசு இதில் மேலும் அக்கறை காட்டக்கூடும் என்ற எதிர்பார்ப்பினாலும் அமெரிக்க அரசாங்கத் தரப்பிலும், சிறீலங்கா அரசாங்கத் தரப்பிலும் இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றால் மிகையாகாது.

எனவே, இந்திய அரசாங்கம் இதை மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும்போரை உடனடியாக நிறுத்தச் செய்யவும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறுபடாத ஒரு இணக்கத் தீர்வு ஏற்படச் செய்யவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

''வாஜ்பாயின் நிலைப்பாட்டை நாங்கள் ஆதரிக்கிறோம்'', என்று பில்கிளிண்டனின் தூதர் பில் ரிச்சர்ட்டன் பெயர் குறிப்பிட்டே கூறியிருப்பதாலும் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் இதற்கோர் இறுதித் தீர்வைக் காண ஏற்புடையதை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

(61-ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டில் பங்கு பற்றிய வாஜ்பேய் இந்தியாவின் 12வது பிரதமர்!

## ஈழத் தமிழர் எதிர்பார்ப்பு நிறைவேறுமா?

1984ல் மதுரையில்நடைபெற்ற ஈழத்தமிழர் ஆதரவு (TESO) மாநாட்டில் இன்றையத் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, சுப்பிரமணியம்சாமி, நெடுமாறன் மற்றும் ஈழத் தமிழர் தலைவர்களுடன் கலந்து கொண்டு ஈழத் தமிழ் மக்களைக் காக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்று குரல் கொடுத்த வாஜ்பேய் அவர்கள் இன்று இந்தியாவின் 12வது பிரதமராக வந்திருப்பது ஈழத் தமிழ் மக்களிடம் புதிய எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது.

மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் படித்துப் பட்டம் பெற்ற அவர், இந்த விஞ்ஞான வசதிகள் நிரம்பிய யுகத்திலும், சிறீலங்கா அரசின் இனவாதப் போரின் காரணமாக அந்த வசதி தானும் இல்லாமல் அவதியுறும் ஈழத் தமிழ் மக்களின் சிக்கலைத் தீர்த்து வைப்பார் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலம் குவாலியரில் பிறந்தார். பூர்வீகம் ஆக்ராவில் உள்ள படேஸ்வர் கிராமம். இவரது பிறந்த நாளை உலகமே கொண்டாடும். இவரது பிறந்த நாள் கிறிஸ்துமஸ் தினம் (1926)

தந்தை கிருஷ்ண பிஹாரி. கிராமத்து ஆசிரியர். தாயார் கிருஷ்ணாதேவி.

வாஜ்பாயுடன் பிறந்தவர்கள் ஆறு பேர். மூன்று பெண்கள். நான்கு ஆண்கள்.

வாஜ்பாயின் கல்விப் பருவம் சிம்னி விளக்கு வெளிச்சத்தில் தொடங்கியது. எம்.ஏ. பட்டம் பெற்றவர். பிறகு பொதுநலத் தொண்டிலும், அரசியலிலும் ஈடுபட்டார். சிறந்த கவிஞர் பிரம்மச்சாரி.

பாராளுமன்றத்தில் முதல் முறையாக இந்தியில் பேசி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். ஐக்கிய நாட்டு சபையிலும் இந்தியில் பேசினார்.

1977-79ல் மொரார்ஜி தேசாய் மந்திரி சபையில் வெளியுறவுத் துறை மந்திரியாக இருந்தார்.

'பத்ம விபூஷன்' 'சிறந்த பாராளுமன்ற வாதி' ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு மே 16ம் தேதி இந்தியாவின் 10வது பிரதமராக வாஜ்பாய் பதவி ஏற்றார். ஆனால் பதவி ஏற்ற 13 நாட்களிலேயேதான்



சார்ந்த பாரதிய ஜனதாவின் அரசு கவிழ்ந்து விட்டது.

இரண்டு முறை டெல்லி மேல்சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த 12வது பாராளுமன்ற தேர்தலில் உத்திர பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று மீண்டும் 1998 மார்ச் 19ல் இந்தியாவின் 12வது பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

www.padippakam.com



"புண்ணியம்ஆம் பாவம் போம் போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்-எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீதொழிய நன்மை செயல்"—நல்வழி

(அறமே செய்யத் தக்கது. பாவம் ஒழிக்கத் தக்கது. முன்னர் செய்த அறமும் பாவமுமே பின்னர் உலகில் பிறந்த மக்களுக்கு இன்ப துல் பங்களுக்கு ஆன பொருளாகும். எண்ணிப் பார்த்தால் பல்வேறு சமயத்தவர் சொல்வதும்!இது வன்றி வேறில்லை. ஆதலால் தீதை ஒழித்து நன்மையையே என்றும் செய்திடுக.)

# தெளிவு

## இந்தியத் தாய்த்திருநாட்டின் நிலைப்புத் தழைக்கட்டும்!

எந்தக் கட்சி அரசு புரிந்தாலும், யார் பதவி வகித்தாலும் இந்தியத் தாய்த் திருநாட்டின் உறுதியும் நிலைத்த தன்மையும் ஓங்கி ஒளிர வேண்டும் என்பதே உலகமெங்கும் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் எதிர்பார்ப்பும் வேண்டுகையுமாகும். ஈழத் தமிழ் மக்களின் வேண்டுகையும் அதுவே.

ஏனெனில், இந்தியாவின் பலமும், வளமும், உறுதியும் நிலைபபும் தழைப்பதன் மூலமே எந்த நாட்டில் வாழ்ந்தாலும் இந்திய வம்சாவளியினரின் நலமும் வளமும் காக்கப் படும். மதிக்கப்படும்.

மேலும் இந்தியாவே உலக நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக இருப்பதாலும், சாத்விகத்தின் வழிகாட்டியாக-ஜனநாயகத்தின் ஒளியூட்டியாக-ஆன்மீகத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து அனைத்துலகுக்கும் ஆதர்சமாக இருப்பதாலும் அது உறுதிப்பாட்டுடன் ஓங்கி நிற்பது உலகம் முழுவதற்குமே தேவையாகும்.

எனவே, அற்பக் கட்சி மாச்சரியங்கள், யார் பெரியவர் என்ற தனி மனித முனைப்புகள், சொந்த விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றை முன்னிருத்தி இந்தியாவின் உறுதிக்கு ஊறு விளைவித்து விடக்கூடாது என்பதே இந்திய மக்களிடம் உலக மக்கள் விடுக்கும் வேண்டுகோளாகும்.

"தண்ணீர் விட்டா வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் கார்த்தோம்
கருகத் திருவுளமோ!"

என்ற மகாகவி பாரதியாரின் வாக்கை ஒவ்வொரு இந்தியரும் கவனத்தில் நிறுத்தினால் இந்தியா ஏறு நடைபோடும்; வந்த ஊறுகள் அனைத்தும் விலகி ஓடும் என்பதில் ஐயமில்லை.

# மன்னாரிலிருந்து கொழும்பு வரும் பயணிகள் வவுனியாசெல்லத்தடை

### மதவாச்சி ஊடாகவே பயணிக்க வேண்டும் என பாதுகாப்புப் படையினர் புதிய உத்தரவு

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் நாட்டின் தென் பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் வவுனியா வழியாகச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சிங்களப் பகுதியான மதவாச்சி வழியாகவே கொழும்பு செல்ல வேண்டும்.

இதற்கான முடிவு வவுனியாவில் நடந்த பாதுகாப்பு உயர் அதிகாரிகளின் மாநாட்டில் மேற் கொள்ளப் பட்டுள்ளது. இந்த மாநாட்டுக்கு மன்னார் அரசாங்க அதிபர் எஸ்.எம். குருஸும் அழைப்பின்பேரில் கலந்து கொண்டார்.

**உடனடி அமுல்**

இந்த முடிவுகள் பற்றி அவர் தகவல் தருகையில் கூறியதாவது:

மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்கு செல்லும் பிரயாணிகள் இனி மேல் வவுனியாவூடாக செல்ல முடியாது. மதவாச்சியூடாக செல்ல வேண்டும். இந்த புதிய நடை முறை உடனடியாக அமுலுக்கு வரும்.

தற்போதுள்ள நடைமுறைகளின்படி மன்னாரிலிருந்து கொழும்பு, மற்றும் இதர வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பிரயாணிகள் வவுனியாவூடாகவும் மதவாச்சி பாதையூடாகவுமே பிரயாணங்களை மேற்கொண்டு வந்தனர். ஆனால் இனிமேல் மன்னாரிலிருந்து கொழும்பு மற்றும் தென்பகுதிக்கு செல்லும் பிரயாணிகள் மதவாச்சி ஊடாக மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவர்.

**கூடுதல் பஸ் சேவை**

அதே போன்று மன்னார் பிரயாணிகள் ரயில் மூலம் செல்வதாயினும் வவுனியா சென்று ரயிலில் செல்ல அனுமதிக்கப் பட மாட்டார்கள். இவர்கள் மதவாச்சி ரயில் நிலையத்திலிருந்தே ரயில் ஏற வேண்டும். இதனால் மன்னாரிலிருந்து கொழும்பு, மதவாச்சிக்கான கூடுதலான பஸ் சேவைகளும் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பு மற்றும் இதர இடங்களிலிருந்து மன்னாருக்கு வரும் வாகனங்கள் காலை 8.30 மணியளவில் செட்டி குளத்துக்கு வந்து சேர்ந்து விட வேண்டும். பின் அங்கிருந்து காலை 9 மணிக்கு வாகனத் தொடர் புறப்படும்.

கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய இடங்களிலிருந்து மன்னார் ஊடாக வவுனியாவுக்கு நேரடியாக செல்ல முடியும்.

அதே வேளையில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து வருபவர்கள் கொழும்புக்கு செல்வதாயின் மாவட்ட வைத்திய அதிகாரியின் சிபாரிசுடன் கடமையின் நிமித்தம் செல்லும் அரசு ஊழியர்கள், விமான டிக்கட் உள்ளவர்கள் உடன் கொழும்புக்கு செல்ல அனுமதிக்கப் படுவர். ஏனையோர் பாதுகாப்பு படையினரின் விசாரணைக்குப் பின்பே அனுமதிக்கப்படுவர்.

வெளி மாவட்டங்களிலிருந்து மன்னாரில் தங்கி கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு முன்பு ஒரு வருட 'பாஸ்' வழங்கப்பட்டிருந்தது. இனி முதலில் மூன்று மாதங்களுக்குப் பின் ஆறு மாதங்களுக்கும் அதைத் தொடர்ந்து 9 மாதங்களுக்கும் 'பாஸ்', வழங்கப்படும். இதன் பின் இவ்வெளி மாவட்ட அரச ஊழியர்களுக்கு இராணுவ அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப் படும்.

## தமிழ் இலக்கியத்தில் சாதனை படைக்கும் முனைவர் மலையமான் தம்பதியர்

முனைவர் மலையமான் நூலகத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பன்னூலாசிரியர்.

அவருடைய துணைவியார் சரளா இராசகோபாலன் கல்லூரிப் பேராசிரியை. அவரும் பன்னூல் ஆசிரியரே. (முனைவரின் இயற்பெயர் இராசகோபாலன். புனை பெயரே மலையமான் என்பது.)

இருவருமே கவிஞர்கள், இலக்கியச் சொற்பொழிவாளர்கள்.



இவ்விருவர் எழுதிய நூல்களும் அரசுப் பரிசு முதல் பல்வேறு பரிசுகளைப் பெற்ற சிறப்புக்குரியவை.

"தமிழகத்தைப் போல உலகில் வேறு எந்தப் பகுதியும் அயலார் படையெடுப்புகளுக்கும், ஊடுருவல்களுக்கும் ஆளானதில்லை. தமிழ் நாட்டை 13 அயலார் படையெடுத்திருக்கிறார்கள். தமிழ்ப் பண்பாட்டை பாழ்படுத்திவிட்டார்கள்".

—இது முனைவர் மலையமானின் ஆராய்ச்சியில் கண்ட முடிவின் ஒரு பகுதி. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு பருக்கை பதம்.

# 'யுத்தம் அல்ல அரசியல் தீர்வே பிரச்சினைக்கு முடிவு கட்டும்'

### இராணுவ அதிகாரி

இன்று நடைபெறும் இந்த யுத்தத்தின் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றலாம். ஆனால் அங்கு வாழும் மக்களுக்கு நல்லதொரு தீர்வினை எங்களால் வழங்க முடியாது.

அதை வழங்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகளே அப்படி அவர்கள் வழங்கத் தவறினால் மேலும் பிரபாகரன்கள் தோன்றுவார்கள் யுத்தமும் தொடரும் என வவுனியாவிலுள்ள உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இன்னும் சில நாட்களிலோ அல்லது சில மாதங்களிலோ புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களைகைப்பற்றிவிடுவோம். அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ள பட்டுள்ளன.

**அன்று 10 வீதம் இன்று 30 வீதம்**

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வட பகுதிகளில் 10% இடமே எமது கட்டுப்பாட்டில் இருந்தது இப்போது 80 சதவீதமான இடத்தை நாம் கைப்பற்றிவிட்டோம். முல்லைத்தீவு கிளிநொச்சி மற்றும் மன்னார் வவுனியா நகர்பகுதி தவிர்த்த பல இடங்களில் இடம் பெயர்ந்தோர் உட்பட 4,50,000 மக்கள் வாழுகின்றார்கள். இந்த மக்களையும் நாம் அரவணைக்க வேண்டுமானால் அரசியல் தீர்வு ஒன்று மிகமிகஅவசியம்.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்க மேலும் பல ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் தேவை என்றும் அவர் சொன்னார்.

## லங்காமுதித்த 474பயணிகளுடன் திருகோணமலை வருகை

வடபகுதியிலிருந்து லங்கா முதித்த என்ற அரசின் கப்பல் திருகோணமலை துறை முகத்தை வந்தடைந்தது. இக்கப்பல் மூலம் 474 பயணிகள் வடபகுதியிலிருந்து பயணத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை இக்கப்பலை உடனடியாகவே மீண்டும் வட பகுதிக்கு அனுப்பி வைக்க நடவடிககையினை திருகோணமலை பட்டணமும் சூழலும் பாதுகாப்புக்கான பிரதேச செயலாளர் வீ. வேலும்மயிலும் வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையைச் சேர்ந்த மிஸ்கின் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இக்கப்பல் மூலம் மட்டும் ஆயிரம் அகதிகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்த அகதிகளாவர்.

இவர்கள் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர்வவுனியா மன்னார் பகுதிகளிலுள்ள முகாம்களிலுருந்து அழைத்து வரப்பட்டு திருகோணமலை கண்ணாடித் தொழிற்சாலை அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



## வாசகர் நெஞ்சம்

அன்புள்ள ஆசிரியரே,

'சாவின் விளிம்பில் 6 லட்சம் பேர்' என்ற ஈழ மண்ணின் நிலையை விளக்கும் முதல் பக்கச் செய்திக் கட்டுரையினைப் படித்துக் கண்ணீர் வடித்தேன். அந்த 6 லட்சம் பேரை மீட்க வழி ஏதும் கிடையாதா? இந்தியாவின் கவனத்தை இது விடயத்தில் ஈர்த்து அவர்களைக் காப்பாற்ற ஆவன செய்ய வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும்.

எம்.வி. இராகவன், சின்னமனூர்

வன்னிக் காடுகளில் சாவின் விளிம்பில் நிற்கும் 6லட்சம் பேரில் 1 லட்சம் பேர் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் என்றும், அவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது என்றும் ஈழசுதந்திரன் முதல் பக்கக் கட்டுரை மூலம் உணர்ந்தேன். அவர்களுக்கு உதவுவார் யாருமே கிடையாதா? உலகில் மனிதாபிமானம் மாண்டு போய் விட்டதா?

தே. மேலவாசகம், சங்கரன்கோயில்

''இந்திய ஜனநாயகம் இடர் நீக்கி வெல்லும்'' என்று ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். போகிற போக்கைப் பார்த்தால் இடர் மேலும் படரும் இன்னல் தொடரும் என்பதுபோல் அல்லவா தெரிகிறது!

தி.க. நித்தியானந்தம், குற்றாலம்

''சமுதாய அடிப்படையிலான மறுவாழ்வு'' என்ற தலைப்பில் டாக்டர் சுப்பிரமணியம் நடராசா தந்திருந்த கேள்வி-பதில் ரீதியிலான விளக்கம் அருமையாக இருந்தது. ஆனால் 1997 நவம்பர் இதழின் தொடர்ச்சி 1998 ஏப்ரல் இதழில் வந்திருந்தது. இதன் தொடர்ச்சி இனி 1998 நவம்பர் இதழில் தான் இடம் பெறுமோ?

வி. கணேசமூர்த்தி, மதுரை-1.

''கிலிகொள்ளச் செய்த கிளிநொச்சிப் பயணம்'' கட்டுரை கண்டேன். அரசு அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்களுக்கே இத்தகைய பயங்கர அனுபவம் காத்திருந்ததென்றால், மற்றவர்களுடைய கதி என்ன?

என். கதிர்காமநாதன், விருதுநகர்

கவிதைச் சரத்தில் தி. சித்திரவடிவின் கவிதை சிறப்பாக இருந்தது. ''பார்தி கண்ட பெண்களாய் இந்தப் பாரை ஆள வந்தோம். நேரெதிர் நிற்கப் போமோ நாங்கள் நினைத்ததை முடிப்போம்'' என்ற வரிகள் இன்றைய ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் இதயத்தைப் படம் பிடித்துக் காட்டும் புரட்சிக் குணத்தின் புதிய வார்ப்பாகும்.

கே. அமீர்ஜான், திருப்பூர்

'அறிவியல்' பகுதியில் ''தகவல் தொடர்பு கோட்பாடுகள்'' பற்றிய விளக்கம் நன்றாக உள்ளது. ''தாய்ப்பால் அமுதம்'' என்ற தலைப்பிலான பெட்டிச் செய்தி பயன் மிக்கது. 'முதுகுவலி போகலையா?'' என்ற தலைப்பில் அமைந்த கருத்தும் வரவேற்புக்குரியது.

ஏ. மாசிலாமணி, திருச்சி-3.

வெகு நாட்களாகக் காணாமல் போயிருந்த சுப்பையர் சென்ற இதழில் மீண்டும் தோன்றியிருக்கிறார். திரும்பவும் காணாமல் போகாதிருப்பாரா? ஏனென்றால் ஈழத்துச் செய்தியை அவரது யாழ்ப்பாண நடையில் காணச் சுவையாக உள்ளது.

சி. ஆர். முத்து, விழுப்புரம்

''ஒரு குறளை உணர்வோம்'' பகுதியில் ''பிறன் பொருளாள்'' என்ற சொல்லாட்சிக்கு ''மற்றவனின் வாழ்க்கைக்கு அர்த்தமாக இருப்பவள்; அவளை நீக்கினால் அவன் ஒரு பொருளே அல்ல'' என்று 'அருகோ' கண்டிருக்கும் புத்துரை அறிவு சார்ந்தாக உள்ளது,

புலவர் நா. மணிமொழி, காஞ்சிபுரம்

தந்தை செல்வாவின் வரலாறு கூறும் ந. சபாரத்தினம் கட்டுரை ஒரு புதிய போக்கில் செல்கிறது. செய்திகளைச் செம்மையாகத் தொகுத்துள்ளார்.

மா. இராஜாங்கம், திண்டிவனம்

முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்களுக்கு அமுதன் அடிகள் அறக்கட்டளை இலக்கியப் பரிசு வழங்கிய செய்தியை ஈழசுதந்திரனில் கண்டேன். ஈழ தேசிய இனத்தின் குரலாக ஒலித்தாலும் தமிழ்நாட்டு எழுத்தாளரையும் மறவாத தன்மையை வரவேற்கிறேன்.

கவிஞர் வ.செந்தில்நாதன், மறைமலைநகர்

# நெம்மேலி முகாமில் தந்தைசெல்வா நினைவு கிரிக்கெட் போட்டி

ஈழத் தந்தை செல்வா அவர்களின் நூற்றாண்டு நிறைவு பெறுவதை உலகத் தமிழர்கள் கொண்டாடும் வேளையில் அவரின் நினைவை முன்னிட்டு நெம்மேலி இலங்கை அகதி முகாம் மக்களால் மென்பந்து கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. இதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள முகாம் அணிகள் கலந்து கொண்டன.

### செல்வாவின் மைந்தர்

1.நெம்மேலி, 2. சாலவன் குப்பம், 3. கடப்பாக்கம், 4. கேளம்பாக்கம், 5.முட்டுக்காடு. 6. யாழ் மாஸ்ரஸ், 7. கோவளம், 8. கும்முடிப் பூண்டி அணிகள் கலந்து கொண்டன. 23—3—98 மாலை 5 மணிக்கு இறுதிப் போட்டிகள் நிறைவு பெற்றன அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா அவர்களின் மைந்தரும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகப் பொருளாளருமாகிய சா.செ. சந்திரகாசன் அவர்களும்,கழகத் தலைவர் முனைவர் அரு. கோபாலன் அவர்களும வருகை தந்திருந்தனர். முகாம் மாணவர்களின் அணி வகுப்புடன் வரவேற்கப்பட்டனர். அடுத்து தந்தை செல்வா அவர்களின் நினைவுப் பாடசாலையை அவர் மைந்தன் திறந்து வைத்தார். பின்னர் முகாமைச் சுற்றிப் பார்த்தார்.

இறுதிப் போட்டியில் நெம்மேலி மற்றும் கும்முடிப்பூண்டி அணியினரும் விளையாடி நெம்மேலி அணி முதலிடமும் கும்முடிப்பூண்டி அணி இரண்டாம் இடமும் பெற்றது.

### நிகழ்ச்சிகள்

மாணவர்களின் அணி வகுப்புடன் பரிசளிப்புநிகழ்ச்சி தொடங்கியது. மாணவர் மன்றத்தினர் ஈழப் பண்பாட தியாகிகளுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தந்தை செல்வா அவர்களின் உருவப் படத்திற்கு என். எஸ். ஏகாம்பரம் (ஊராட்சி மன்றத் தலைவர்) மாலை அணிவித்து, குத்து விளக்கு ஏற்றி வைத்தார்.

அடுத்து முகாம் தலைவர் ராஜமணி வரவேற்புரையாற்றினார். அடுத்து காஞ்சிபுர மாவட்ட சமூக சேவையாளர் முருகேசு (ஆசிரியர்) தந்தை செல்வாவை நினைவு கூர்ந்து உரையாற்றினார். கழகத் தலைவர் முனைவர் அரு. கோபாலன் உரையாற்றுகையில் அங்கு நடைபெற்ற மென் பந்து கிரிக்கட் போட்டியினை வர்ணனை செய்த இளைஞர் அழகான செந்தமிழிலே செய்ததைப்பாராட்டி இதுபோன்ற வர்ணனைகள் இனி மலரப் போகும் ஈழத்தின் மூலம் உலகெங்கும்ஒலிக்கும் எனஉறுதிப் படக் கூறினார்.

கழகப் பொருளாளர் சா. செ. சந்திரகாசன் அவர்கள் தனது உரையில் ஈழத்தில் மாணவர்கள் கல்வி கற்பதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், ஈழத்தில் மக்கள் எதிர்நோக்கும் துன்பங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். தற்போது இந்தியாவில் முகாம்களில் வாழும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நன்றாகக் கல்விக் கற்க வேண்டும் என்றும், தமிழகத்தில் இருக்கும்பொழுது கல்விக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகளை நன்கு பயன் படுத்தி நாளை ஈழத்தில் நல்ல சேவை செய்யப்பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து நெம்மேலி ஊராட்சி மன்றதலைவர் என் எஸ்.ஏகாம்பரம் பேசுகையில் இந்திய சுதந்திரத்திற்காக மகாத்மா காந்தி பாடுபட்டு, சுதந்திரம் பெற்றுக் கொடுத்ததைப் போல இலங்கையிலே தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்று அகிம்சை முறையில் போராடிய உத்தமத் தலைவர் செல்வா என்றார். அதனைத் தொடர்ந்து மாமல்லபுரம் பேருராட்சித் தலைவரும் மாமல்லபுர மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத் துணைச் செயலாளருமாகிய ஈ. சத்தியா கலந்து கொண்டு பேசும் போது ஈழத் தமிழர்கள் உரிமைக்காக தானும் தன்னுடைய கழகமும் என்றும் குரல் கொடுப்போம் எனத் தெளிவுபடக் கூறினார்.

### பரிசளிப்பு நிகழ்ச்சி

பரிசளிப்பு நிகழ்ச்சியை செல்வன் கஜன் தொகுத்து வழங்கினார். முதலில் போட்டியில் சிறந்த வீரர் எழுவருக்கு ஏகாம்பரம் பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார். பின்னர் எல்லா போட்டிகளிலும் சிறப்புவீரராக தெரிவு செய்யப்பட்ட நெம்மேலியைச் சேர்ந்த செல்வன் சின்ன வீரன் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. இதைக் கழகத்தலைவர் அரு கோபாலன் வழங்கினார். இரண்டாம் இடத்தைப் பிடித்த கும்முடிப் பூண்டி ரெட்சன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு தந்தை செல்வா நினைவு ரன்னஸ் கோப்பையை ஏகாம்பரம் அவர்கள் அணியின் தலைவர் சங்கரிடம். வழங்கினார். அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா சம்பியன் கப்பை நெம்மேலி அணியின் கெப்டன் அன்பு செல்வராஜிடம் தந்தை செல்வாவின் மைந்தன் சா. செ. சந்திரகாசன் வழங்கினார்.

இவ் விழாவில் அருகில் உள்ள நெம்மேலி குப்பத்தைச் சேர்ந்த இளைஞர்களும், பெரியோர்களும், கேளம்பாக்கம் முகாம் தலைவர் பாலன் அவர்களும், முட்டுக்காடு. கோவளம் ஆகிய அணிகளின் தலைவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து இப் போட்டியின் அமைப்பாளரும் முகாம் செயலாளருமாகிய அன்பு செல்வராஜ் தனது நன்றியுரையில் இப்போட்டியை நடத்திட எல்லா வகையிலும் உதவிய மாணவர் மன்றம். முகாம்குழு, மாதர் சங்கம், பொது மக்கள் ஆகியோருக்கும், பரிசுகளை வழங்கி உதவிய ஞான கணேசன் (கனடா), அன்ரன் மரியதாஸ் (ஜெர்மனி) மற்றும் கழகத்தின் முன்னாள் துணைத் தலைவர் வே. கயிலாயபிள்ளை அவர்களுக்கும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்திற்கும், இதில் கலந்து கொண்டு சிறப்பித்த, முகாம் கழகங்களுக்கும் மத்தியஸ்தராக கடமையாற்றிய பூங்குன்றன், திருச் செல்வம், மனோ மற்றும் கோவிந்தன் ஆகியோருக்கும் நன்றி கூறிட விழா நிறைவு பெற்றது.

தொகுப்பு:
அன்பு செல்வராஜ்
முகாம் செயலாளர் மற்றும்
விளையாட்டு அமைப்பாளர்.

## நான்கு மண்டலங்களில்
# 177 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள்
## ஈ.ஏ.ம. கழகம் வழங்கியது

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின்மருத்துவப் பகுதியூடாக முகாம்களில் வாழும் ஈழத் தமிழ் அகதி மக்களில் கடந்த மூன்று மாதங்களில் கண் பார்வை குறைவான மக்களுக்கு ஏறக்குறைய நூற்றி எழுபத்தேழு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சென்னை மண்டலத்தை சேர்ந்த 52 பேருக்கும், திருச்சி மண்டலத்தை சேர்ந்த 37 பேருக்கும், நெல்லை மண்டலத்தைச் சேர்ந்த 28 பேருக்கும், பவானி மண்டலத்தைச் சேர்ந்த 60 பேருக்கும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

அடுத்து வரும் மாதங்களில்மேலும் பலருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நடவடிக்கைகளை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் மருத்துவப் பகுதி மேற்கொண்டுள்ளது.

மூக்குக் கண்ணாடிகளை பெற விரும்புவோர் தமது கண்களை அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்து அரசு மருத்துவமனையால் வழங்கப்

(14-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com






**யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. ✻இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.**

**ந. காளத்தியப்பன்-திருத்தணி**

கே: சிறீலங்கா ராணுவத்தின் 'ஜெயசிக்குறு' நடவடிக்கை வெற்றியா? தோல்வியா?

ப: ராணுவத்திலிருந்து 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஓடுவோரின் தொகை அதிகரித்து வருகிறதாம். அது எதைப் புலப்படுத்துகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

**இரா. கண்ணன்-புதுவை**

கே: இந்தியாவில் தேர்தல் முடிந்து புதிய ஆட்சி உறுதிப்படுவதற்கு முன்பே சிறீலங்கா ஆட்சியாளர்கள் தம் தூதுவராகத் தமிழரான கதிர்காமரை டில்லிக்கு அவசர அவசரமாக அனுப்பி தம் நிலைக்கு ஆதரவு தேடிக் கொண்டனர். ஆனால் தமிழர் தரப்பில் அத்தகைய ஆதரவு திரட்டும் பணி நடைபெறவில்லையே ஏன்?

ப: ஜனநாயக அரசியல் அரங்கில் ஈழத்தில் கட்டப்பட்ட ஒட்டு மொத்தத் தமிழ்த் தலைமை இன்று இல்லாமல் இருப்பதுதான். என்னதான் போர்க்களத்தில்திறமைகாட்டினும், இராசதந்திரக் களத்தில் உரிய கவனம் செலுத்தப்படாவிட்டால்...அக்களம் ஜனநாயக ரீதியில் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படாவிட்டால் அது சிங்கள இனவாதிகளுக்குத் தான் சாதகமாக இருக்கும்.

**க. எதிர்மனசிங்கம் சென்னை-106.**

கே: இராணுவத்தின் மூலம் தமிழ் மக்களுக்குத் தொல்லைகளையும், எல்லையில்லாச் சோதனைகளையும் தரமுடியுமே தவிர, முழு வெற்றிபெற முடியாது என்று தெரிந்தும் சிறீலங்காச் சிங்கள பேரினவாதிகள் தொடர்ந்து இராணுவத்தையே நம்புவதேன்?

ப: ஆயுத பேரங்கள் மூலம் காசடிக்கலாம்; அண்டை நாட்டிற்கு சிறீலங்கா இராணுவம் வைத்திருப்பதைக்காட்டிக் கொள்ளலாம் என்பதற்காக இருக்கலாம்!

**தி.சி. வன்னிநாயகம் கோவை-18**

கே: பௌத்த மதகுருமார் சங்கங்களுக்கு வெளிநாட்டுக்காரர்கள், ஏர்கண்டிசனர்கள் போன்ற நவீன வசதிகளைச் சந்திரிகா அரசாங்கம் தாராளமாகச் செய்து கொடுத்தும் கூட அவருடைய அதிகாரப்பரவல் திட்டத்தை அவர்கள் ஏற்கவில்லையாமே?

ப: மதவாதிகளை எந்த நாட்டிலும் எந்த அரசியல் வாதிகளாலும் முழு அளவில் திருப்திப்படுத்திவிட முடியாது புத்த பிக்குகளை முன்னிருத்தும் வரை இலங்கையில் ஒருக்காலும் சமாதானத்தையும் சமரசத்தையும் கொண்டுவர முடியாது என்பதை சிங்கள அரசியல் வாதிகள் உணர வேண்டும்.

அதிலும் தன் தந்தையையும், கணவரையும் புத்த மதமேறிய சிங்கள இனவெறிக்கு பலிகொடுத்த சந்திரிகா, புத்த பிக்குமாரைச் சரிக்கட்டி சமாதானத்தைக் கொண்டு வர முடியும் என்று எண்ணுவது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்க முயற்சிப்பது போன்றதேயாகும்.

**ஜி.பி. மதனன் இராசபாளையம்**

கே: முன்பு கூட்டணிக் கட்சிக்காரர்களை பாராளுமன்றக் கதிரைகளுக்காக மக்களை விற்பவர்கள் என்று வசைபாடிய சில போராளி அமைப்புகள், இன்றைக்குத் தாங்களும் அதையே செய்வது எதைக் காட்டுகிறது?

ப: அவர்களாவது தங்களை விமர்சிக்க இடம் கொடுத்தார்கள். இவர்கள் அதையும் பொறுக்கத் தயாராக இல்லாததால், அவர்களே மேல் என எண்ண வைத்துவிட்டதை!

**டி.எஸ். அம்பலவாணர் நெல்லை**

கே: ஒரு பக்கம் சிங்கள ராணுவம் கடற்படையின் கண்டதும் சுடும் கொடுமை, மறுபுறம் மக்கள் குடையை இழக்க விரும்பாத புலிகளின் எதிர்ப்பு, இன்னொருபுறம் இந்தியக் கடற்படை இராணுவத்தின் அச்சுறுத்தல் இத்தனைக்கிடையிலும் ஈழத்தில் இருந்து தமிழ் மக்கள் தொடர்ந்து இந்தியாவுக்கு அகதிகளாக வருவது எதைக் குறிக்கிறது?

ப: ஒன்று ஈழத்தில் அவர்களின் வாழ்க்கை அந்த அளவுக்குநரகமாகிவிட்டதை. இரண்டு, இலங்கை ஒரு தீவாக மட்டும் இல்லாமலிருந்தால் அத்தனை தமிழ் மக்களும் இந்தியாவுக்கு அகதிகளாக எப்போதோ ஓடி வந்திருப்பார்கள் என்பதை!

**S.M. இம்மானுவேல் நாகப்பட்டினம்**

கே: சிங்கள முப்படைகளையும் திணற அடிக்கும் புலிகளின் போர்க்கள வெற்றிகள் போற்றத்தக்கன அல்லவா?

ப: உண்மைதான். ஆனால் தமிழ் மக்கள் அழிவின் விளிம்பில் தள்ளப்பட்டிருப்பதும், இருப்பதை மேலும் மேலும் இழந்து வருவதும் கண்கூடல்லவா! இதைத் தவிர்க்க என்ன வழி என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

**இஸட்.இ. அகமட்-தொண்டி**

கே: இலங்கையின் தமிழ் பேசும்மக்களான ஈழத்தமிழர், இஸ்லாமியத் தமிழர், இந்திய வம்சாவளித் தமிழர் என்ற இம் முப்பிரிவும் பிரிந்து நின்றதாலேயே சிங்கள ஏகாதிபத்தியவாதிகளால், அவர்களை ஒடுக்க முடிகிறது; ஒழிக்க முடிகிறது என்பதை இனியேனும் உணர்வார்களா?

ப: இம் முப்பிரிவிலுமுள்ள சாதாரண மக்கள் இதை முற்றாக உணர்ந்துவிட்டனர். அவர்களை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் தலைவர்கள் தான் அந்த ஒற்றுமை உணர்வுக்கு உருவம் கொடுக்காமல், அதில் மேற்சென்று தமிழ்த்தேசிய விடுதலைக்கு ஒன்றுபட்டு வழி சமைக்காமல், சிங்கள இனவாதிகளுக்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

# மாங்குளம் நகரை நோக்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

மாங்குளம் நகரை நோக்கிய படையினரின் இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கையின் போது வெள்ளிக்கிழமை பகல் இரவாக இரு தரப்பினரிடையேயும் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

இந்த மோதலின் போது படையினர் தரப்பில் பலர் காயமடைந்தனர் என்றும் இவர்கள் சிகிச்சைக்காக அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று சனிக்கிழமையும் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்கள் தொடர்ந்தன.

அத்தோடு கபீர் குண்டு வீச்சு விமானங்கள் நேற்று சனிக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மாங்குளம் பகுதியில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கபீர் விமானங்கள் பொது மக்களின் குடியிருப்பு பகுதிகளை இலக்காக வைத்தே தாக்குதல்களை நடத்துவதாக புலிகள் வன்னியில் அறிவித்து உள்ளனர்.

இதேவேளை வியாழக்கிழமை வடமராட்சி அம்பன் குடத்தனை பகுதியில் இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று இடம் பெற்றதாகவும் மோதலின் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து படையினர் தமது படை நிலைகளில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதன் காரணமாக அசோகன், அற்புதராணி (29) என்ற இரு குழந்தைகளின் தாயான கர்ப்பிணிப்பெண் உயிரிழந்தார் என்றும் தெரியவருகிறது.

# ஒருதரம் உணர்வோம்

## பிறன் கடை என்பது பிறன் மனையாள் ஆகுமா?

– "அருகோ" –

"அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரில் பேதையார் இல்"

—திருக்குறள்: 142

பரிமேலழகர்: அறன்கடை நின்றாருள் எல்லாம்-காமம் காரணமாகப் பாவத்தின் கண் நின்றார் எல்லாருள்ளும்; பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறன் இல்லாளைக் காதலித்து அவன் வாயிற்கண் சென்று நின்றார் போலப் பேதையார் இல்லை.

அறத்தின் நீக்கப்பட்டமையின் 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்ற பெண்வழிச் சேர்வாரும், வரைவின் மகளிரோடும், இழிகுல மகளிரோடும் கூடி இன்ப நுகர்வாரும் போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், 'பேதையாரில்' என்றார். எனவே இன்பமும் என்பது பெறப்பட்டது.

மணக்குடவர்: காமத்தின் கண்ணே நின்றார் எல்லாரினும் பிறரொருவன் கடைத்தலைப் பற்றி நின்றவர்களைப் போல் அறியாதார் இல்லை.

பரிதியார்: கடையாகிய பாவத்தில் நிற்பவர்க்குள்ளே பிறன் மனையாளை விரும்புபவரைப் போலே பேதையார் இல்லை; தன்மத்தின் கண்ணே நின்றவர்க்குள்ளே பெரியவர் ஆர் என்னில், பிறன்மனை நோக்காமல் இருப்பவரே.

டாக்டர் மு. வ.: அறத்தை விட்டுத் தீநெறியில் நின்றவர் எல்லாரிலும் பிறன் மனைவியை விரும்பி, அவனுடைய வாயிலில் சென்று நின்றவரைப்போல் அறிவிலிகள் இல்லை.

'அறன்கடை' என்ற சொல் அறம்-கடை என்று பிரிக்கப்பட்டு, அறத்தைக்கடைப்பட்டதாக அதாவது கீழ்மையுள்ளதாகக் கருதுவது என்று எப்படிப் பொருள் கொள்ளப்பட்டதோ, அப்படியே 'பிறன்கடை' என்ற சொல்லும் பிறர்-கடை என்று பிரிக்கப்பட்டு, பிறரைக் கடைப்பட்டவராக அதாவது கேவலமாகக் கருதுவது என்று பொருள் கொள்ளப்படுவதே ஏற்புடையதாகும்.

அவ்வாறு நோக்கின் "அறத்தைக் கேவலமாகக் கருதி அதாவது தேவையற்றதாகக் கருதி வாழ்பவர் எல்லாரிலும், (தன்னைத் தவிர) பிறரைக் கேவலமாக அதாவது துரும்பாகக் கருதி நடந்து கொள்பவரைப் போன்ற அறிவிலிகள் இல்லை" என்ற பொருளே இக் குறட்பாவுக்கு ஏற்புடையதாகவுள்ளது.

நாம் ஏற்கனவே சொல்லியதைப்போல குறட்பாக்களை திருவள்ளுவர் பொது அறம் நோக்கியே இயற்றினார் என்பதற்கும் பின்னால் வந்தவர்களே பால், இயல், அதிகாரம் என்பதாகப் பிரித்துத் தொகுத்துள்ளனர் என்பதற்கும் இக் குறட்பாவே ஏற்ற சான்றாகும். ஏனெனில் இதில் பிறன் இல் விழையாமை பற்றிய குறிப்பே இல்லை. பிறரைக் கேவலமாகக் கருதும் போக்கைத் தான் பேதைமை அதாவது அறிவிலித்தனம் என்று சாடியுள்ளார். மற்றப்படி 'பிறன்கடை' என்பதற்கு 'பிறனுடைய மனையாள்' எனப் பொருள் கொள்ள எவ்வித ஏந்துமில்லை. 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரத்தின் கீழ் இக்குறட்பாவை வைத்துள்ளதால் அப்படி வலிந்து பொருள் கண்டுள்ளனர் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, இங்கே ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம் என்பதற்கே இடமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# கொழும்பில் வாணிகம் பாதிப்பும் வடக்கில் மக்கள் பெயர்வும்

### பி. பி. சி. தரும் சித்திரம்

தலைநகர் கொழும்பில் நடந்த இரண்டு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த தாக்குதலுக்கான ஏற்பாடுகள் கிழக்குப் பகுதியில் உள்ள மட்டக்களப்பில் நடாத்தப்பட்டது என்று போலீசார் கூறுகின்றனர். கொழும்புக்கு வரும் டிரக் வண்டிகளை பாதுகாப்பு சோதனைக்காக 24 மணி நேரத்திற்கு நிறுத்தி வைத்ததில் எந்த அர்த்தமும் இல்லையென்று ஆயர் ஜோசப் கூறினார். இந்தக் கட்டுப்பாடுகள் வாணிகத்தைப் பாதிக்குமென மீன்போன்ற அழுகும் பொருட்களின் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

**போர், இடைநிறுத்தம்**

இது இப்படியாக, வடக்கில் கடந்தகாலம் இடம்பெற்ற கடுமையான சண்டைகளுக்குப் பிறகு இராணுவம் தம்முடைய நகர்வு நடவடிக்கைகளை அதாவது, மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளை இப்பொழுது தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இருந்த போதிலும் அங்கே இராணுவமும் விடுதலைப்புலிகளும் ஒருவரையொருவர் எதிரிகளின் நடமாட்டங்களை அவதானிப்பதற்காக அவர்களுடைய நிலைகளை அவதானிப்பதற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் சிறு சிறு குழுக்களாக ஆங்காங்கே நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் குழுக்குழுவாக முன்னேறிச் செல்லும் போதும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற போதும் எதிர்பாராத விதமாக அவர்கள் மோதிக் கொள்கின்றார்கள்.

இதற்கிடையே 'செல்' வீச்சுக்களும், மோட்டார் தாக்குதல்களும் நடைபெறுகின்றன. படைப்பலத்திடமிருந்தும் புலிகளுடைய-நிலைகளை-நோக்கி அவர்கள் செல் வீச்சுக்களையும், விமானக் குண்டுத் தாக்குதல்களையும் நடாத்துகின்றார்கள். இம்மாதிரியான தாக்குதல்கள் மூலம் இரு தரப்பிலும் சேதங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு நடைபெறுகின்ற - புலிகளுடைய மோட்டார் தாக்குதல்களும் கொரில்லாப் பாணியிலான தாக்குதல்களிலும் நாளாந்தம் படையினர் காயமடைந்து அனுராதபுர ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகின்றனர். கடந்த வாரத்தில் போர் இவ்வாறாக நாள் ஒன்றுக்கு இரண்டு பேர் அல்லது மூன்று பேர் விகிதம் அனுராதாபுரத்திற்கு சிகிச்சைக்காகக் கொண்டு வருகின்றார்கள்.

இந்நேரத்தில் ஒலிமடுப் பகுதியில், மாங்குளம் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வேவு பார்த்து வருகின்ற புலிகள் மீது தாங்கள் தாக்குதல் நடாத்திப் பலரைக் கொன்றுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. குஞ்சுக்குளம் பகுதியில் இருந்து உயிலங் குளம் வழியாக வந்து கொண்டிருக்கிற இடம் பெயர்ந்த மக்களும் அதன் வழியாகவே வர வேண்டும். ஆயினும் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவை நடைபெறாத காரணத்தினாலேயும் அதே போலத் தலைமன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவை, பயணிகள் சேவை, நடைபெறாமல் இருப்பதன் காரணமாகவும் இடம் பெயர்ந்த மக்கள் பெருமளவில் தமது இடத்திற்கு வந்து சேர முடியாத நிலைமை அங்கு இருந்து கொண்டிருக்கின்றது.

**கடும் நடவடிக்கை**

அதே நேரத்தில் சதிகாரர்களும் பெருமளவில் ஆட்கள் வருவதை விடவில்லை. இதை விட கொழும்பு மற்றும் நாட்டின் பெரும் பகுதிகளுக்கு செல்வதற்காக வருகின்றார்கள் இப்பொழுது மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். வவுனியாவுக்கு வரவேண்டியவர்கள் நாளாந்த தேவைகளை முடித்துக் கொண்டு செல்லுவதற்காக குறிப்பிட்ட அளவிலான மக்கள் மாத்திரம் உயிரிலங்குளத்தில் இருந்து அவர்கள் நேரடியாக வவுனியாவிற்கு செல்கின்றார்கள். இதே நேரத்தில் தேசிய அட்டை இல்லாத எவரும் உயிரிலங்குளம் ஊடாக வரமுடியாத ஒரு கடுமையான நடைமுறை அமைப்பு ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் அவர்கள் பெரும் சிரமங்களையும் கஷ்டங்களையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறு, பி.பி.சி. தனது 'தமிழோசை' ஒலிபரப்பில் கூறியுள்ளது.

"ஈழசுதந்திரன்"

மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 60-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகி

ஈழசுதந்திரன்

14, சேட் காலனி முதல் தெரு,

மூன்றாம் மாடி

எழும்பூர், சென்னை-8.

# வாழைச்சேனை பகுதி கிராமங்களில் அதிகாலைமுதல் பாரிய தேடுதல்

### பல இளைஞர், யுவதிகள் முகாமிற்கு கூட்டிச் சென்று விசாரணை

வாழைச் சேனைப் பகுதி கிராமங்களில் நேற்று ஞாயிறு அதிகாலை பாரிய சுற்றி வளைப்புக் தேடுதல் நடவடிக்கை இடம் பெற்றது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இந்த தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்,

புதுக்குடியிருப்பு, கண்ணன் கிராமம், பேத்தாளை, கண்ணகிபுரம், விநாயகபுரம், ஆகிய கிராமங்களே பரந்தளவில் சுற்றி வளைத்துத் தேடப்பட்டன. அதிகாலை 4 மணி முதல் வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன. வீடு வீடாக சென்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதோடு இளவயதினர் மற்றும்சந்தேகித்துக் கிடமானோர் பொது இடமொன்றுக்கு அழைத்து விசாரிக்கப்பட்டனர். இதன்போது பல இளைஞர் யுவதிகள் மேலதிக விசாரணைக்காக வாழைச்சேனை இராணுவமுகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் வாழைச்சேனை பகுதியில் இத்தகைய பாரிய சுற்றிவளைப்பொன்று இடம் பெற்றுள்ளது பொதுமக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை

இதே வேளை கடந்த சனிகிழமை மாலை இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் நீண்ட நேரம் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது. இருதரப்பினருக்கும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடத்தியதில் 4 பொது மக்கள் காயமடைந்தனர்சிலர்படுகாயமடைந்தனர் காயமடைந்த எஸ் லிங்கேஸ்வரன் 24 என். வினோதன் 21, கே. தவமணி 44 ஆகிய நால்வரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அப்பாவிகளைக் கொன்றுவிட்டு புலிகளை அழித்து விட்டதாகக் கூறுவதால் சமாதானம் வந்துவிடாது

### பொக்குறுணி நினைவுக் கூட்டத்தில் புளொட் எம்.பி. அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுக் சமூகம்

தம்பலகாமம். பொக்குறுணி கிராமத்தில் பெப்ரவரி 11-ஆம் திகதி பொலிஸ் மற்றும் ஊர் காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்ட எட்டு பொதுமக்களின் 14 ஆவது நினைவு நாள் கடந்த 13 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி இந்த நினைவுநாள் அனுஷ்டிப்பை புதுக்குடியிருப்பு, பொக்குறுணி, பாரதிபுரம் ஆகிய இடங்களில் நடத்தியது.

இந்த எட்டுப்பேரின் நினைவாக சமாதி ஒன்றுக்கும் அத்திவாரமிடப்பட்டது.

**அடிக்கல் நாட்டல்**

வன்னி மாவட்ட எம்.பி. வை. பாலச்சந்திரன் இந்த அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

புளொட்டின் அரசியல் உயர்பீட உறுப்பினர் ஹரி பாபு, மாவட்ட பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன். சங்கர், கிராமோதய தலைவர் செல்வராசா உட்பட பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இறந்தவர்களின் பேரால் பஸ் தரிப்பிட நிழற் குடை ஒன்றும் கட்டப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லைஇந்த இளைஞர்களின் பெற்றோர் நாட்டிவைத்தனர்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பாடசாலையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டம் பற்றி கந்தளாய் வங்கி திறப்பு விழாவில் கலந்துகொள்ள வந்திருந்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

**பாலச்சந்திரன் உரை**

தகவல் கிடைத்து அமைச்சரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கிராமோதய சபைத் தலைவர் தா.செல்வராஜா கூட்டத்திற்கு தலைமை வகித்தார். வன்னி எம். பி. வை பாலச்சந்திரன் பேசுகையில், தம்பலகாமத்தில் மூன்று கிராமப் பகுதியில் பொலிஸ் ஊர்காவற் படையினரால் மிகக் கேவலமான முறையில் எட்டுப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடற்ற தன்மையினை வெளியுலகம் காணக்கூடியவாறு எமது கழகத் தோழர்களால் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மாதிரியான சம்பவம் இலங்கையில் தமிழ் மக்கள் மீது பல தடவைகள் பல இடங்களில் பதவிக்கு மாறி மாறிவந்த அரசுகளின் காலங்களில் இடம்பெற்றுள்ளது. ஆனால் இவற்றை தடுத்து நிறுத்தி மூவின மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கக்கூடிய எந்த ஆட்சியும் இல்லை. இந்த நிலை தொடர அனுமதிக்க முடியாது.

அப்பாவி மக்களை சுட்டு விட்டு பாதுகாப்புப் படையினர் கூறும் கதையினை நம்பி உலகிற்கு புலிகளை அழித்துவிட்டதாகக்கூறலாம். ஆனால் இலங்கையில் மூவின மக்கள் எதிர் பார்க்கும் அமைதி, சமாதானம் மலர இடமேயில்லை. படையினரிடம் இருந்து பாதுகாக்க ஆயுதம் ஏந்த வேண்டிய நிலையே தொடர்கின்றது என்பது கடந்த பொக்குறுணி சம்பவம் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது.

தம்பலகாமம் பகுதியில் எமது கழக அலுவலகம்உள்ளதால் அவ்வுறுப்பினர்கள் துரிதகதியில் செயற்பட்டனர். பொதுமக்கள் பொலிஸ் ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதை வெளியுலகிற்கு தெரியப்படுத்தினர். பகிரங்கமாக இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள் படுகொலையை ஒப்புக்கொண்டு மன்னிப்பு தெரிவித்தனர். இதன் பின்பே உண்மைகள் வெளியாகியது. ஆனால் எமது உறுப்பினர்கள் இங்கு இல்லாதிருந்தால் உண்மைகள் மறைக்கபபட்டு பலபேர் கைது செய்யப்பட்டு மக்கள் இடம் பெயரவேண்டிய சூழ்நிலையே ஏற்பட்டிருக்கும் என்றார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயிடம் கூட்டத்தில் வைத்து பல மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழத் தமிழர் வரலாறு

## (கி. பி. 1000 வரைக்கானது)

**கலாநிதி சி. க. சிற்றம்பலம்**
(வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

இந்திய வரலாற்றை தெற்கிலிருந்து தொடங்க வேண்டும்; அதாவது தமிழ்நாட்டிலிருந்து தொடங்கினால் தான் உண்மையான இந்திய வரலாற்றை அறிய முடியும் என்பர் விருப்பு வெறுப்புக்கு இடம் கொடாத வரலாற்று அறிஞர்கள். ஆனால் இப்போது எழுதப்பட்ட இந்திய வரலாறுகள் வடக்கிலிருந்து தொடங்கி எழுதப்பட்டனவாகவே உள்ளன. அதனாலேயே பல வினாக்களுக்கு விடை காண முடியாமல் உள்ளன.

இதைப் போலவே இலங்கை வரலாறு என்பது தீவின் வடக்கிலிருந்து, அதாவது தமிழீழப் பகுதியிலிருந்து தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தெற்கிலிருந்து தொடங்கியதால் பல கேள்விகளுக்கு விடை காண முடியாமல் குழம்பும் நிலை உள்ளது.

உண்மையில் ஈழ வரலாறு என்பது தமிழர் வரலாறு-தமிழ் மொழி சார்ந்த வரலாறு தான் என்றால் மிகையாகாது. ஆனால், தமிழ்ப் பகை கக்கும் மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு எழுத முற்பட்டதால் பௌத்த சிங்கள வரலாற்றாசிரியர்கள் தனிச் சிங்கள வரலாறாகவே அதைச் சித்தரிக்க முற்பட்டுள்ளனர். ஈழத் தமிழரின் வரலாற்றை மிக மிகப் பிற்காலத்துக்குத் தள்ளிவிட முனைந்துள்ளனர்.

வரலாற்றை காய்தல் உவத்தலின்றி வரலாறாகவே பார்க்க முற்படும் போது ஈழத் தமிழரின் வரலாறு மிகத் தொன்மையானது என்பதை உலகம் ஒப்புக் கொண்டே தீரும். இது ஒருபுறமிருக்க இன்றைக்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பலர், அதிலும் இளைய தலைமுறையினர் நமது பண்டைய வரலாறு பற்றி ஒன்றுமே தெரியாதவர்களாக உள்ளனர். அவர்களுக்கு தெளிவூட்டும் வகையில் கி.பி. 1000 வரைக்குமான ஈழ வரலாற்றை இங்கே முதல் தொகுதியாக வழங்குகிறார் கலாநிதி சிற்றம்பலம். (ஆ—ர்)

### 1. வரலாற்று பின்னணி:

ஈழத்து வரலாறு பெருமளவுக்குப் பௌத்த சிங்கள மக்களது வரலாறாகவே நிரைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பல அடிப்படைக் காரணங்கள் உள. பௌத்த மதம் ஈழத்தின் வரலாற்றுக் காலத்தின் ஆரம்பம் எனக் கொள்ளப்படும் தேவநம்பியதீஸனின் (கி.மு. 247-210) ஆட்சிக் காலத்தில் இங்கு புகுத்தப்பட அநுராதபுரத்திலுள்ள பௌத்த விகாரைகளில் இம் மதத்தின் வரலாறு சம்பந்தமான நிகழ்வுகளைக் கோவைப்படுத்தும் மரபும் தோன்றி வளர்ந்தது. இவற்றோடு முக்கிய அரசியல் நிகழ்வுகளும் பிறவும் இணைக்கப்பட்டன.

கால கதியில் பௌத்த மதக் கண்டோட்டத்தில் அமைந்திருந்த இக் கருவூலங்களை மையமாகக் கொண்டு பாளி நூல்களாகிய தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம்ஆகியனவும் பிறசிங்கள நூல்களும் எழுச்சி பெற்றன.1 பௌத்த மத வரலாற்றினைக் கூற வந்த இவை நாளடைவில் இவற்றை தழுவிய சிங்கள மக்களது வரலாற்றையும் நாட்டினது வரலாற்றையும் தம்மோடு இணைத்துக் கொண்டன. இதனால் பௌத்தம், சிங்கள மக்கள், நாடு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வரலாறாகவே ஈழத்து வரலாறு வரையப்பட்டது. இத்தகைய வரலாறு சிங்கள மக்களின் ஆட்சி பீடங்கள் அமைந்திருந்த தலைநகர்களை மையமாகக் கொண்டே எழுதப்பட்டது.

மேற்கூறிய அணுகுமுறையினால் தமிழ் மக்களின் வரலாறு உரியவாறு இடம் பெறாமை வியப்பன்று. ''இந்நாட்டிற்கு நாகரிகத்தினை இட்டுவந்தவர்கள் இன்றைய சிங்கள மக்களின் மூதாதையினர். தமிழர்கள் இவர்களுக்கு பின்னர்தான் இங்கு அடி எடுத்து வைத்தவர்கள். இவ்வாறு வந்த இவர்கள் படை வீரர்களாகவும், படை எடுப்பாளர்களாகவும், வியாபாரிகளாகவும் இந்நாட்டிற்கு வந்து பௌத்த பூமியினை ஆக்கிரமித்துச் சீரழித்தவர்கள் உண்மையான மதமாகிய பௌத்த மதத்தினை அன்றிப் பொய்யான மத நெறியாகிய இந்து மதத்தினைத் தழுவியவர்கள். ஆனால் இந்நாடு உண்மையான நெறியாகிய பௌத்த மதத்திற்கும் சிங்கள மக்களுக்குமுரிய 'தம்மதீபம்' இது சிங்கள பௌத்த மக்களுக்கே உரிய பூமி'' என்றவாறான கருத்துக்களே இந்நூல்களின் கருப்பொருளாக உள்ளன.

துரதிர்ஷ்டவசமாக ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் வரலாற்றைக் கோவைப்படுத்தும் மரபு மிகமிக அருகியே காணப்பட்டுள்ளது. தற்போது நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களும் கி.பி. 15-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தவையாகும்.2 இவை கூடத் தற்போதைய வடகிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டிருந்தாலும் கூட இப்பகுதியின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகவோ முழுமையாகவோ எடுத்துக் கூறுவனவாக அவை அமையவில்லை. இதனால் நாடளாவப் பரந்திருந்த ஈழத் தமிழ் மக்களின் வரலாறு பற்றிய ஆய்வுக்கும் குறிப்பாக கி.மு. 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப் பகுதிக்குரிய பாளி-சிங்கள நூல்களிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது.

ஈழத்து வரலாற்றியல் ஆய்வில் சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறும் இலக்கிய ஆதாரங்கள் இவ்வாறு முதன்மை பெற இக்கண்ணோட்டத்திற்கான ஈழத்துத் தொல்லியல் ஆய்வுகளும் முடுக்கிவிடப்பட்டன. ஈழத்துத் தொல்லியல் ஆய்வு ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்னணியை உடையதொன்றாகக் காணப்பட்டாலும் இவ்வாய்வில் வரலாற்றுக் காலத் தொல்லியலுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வரலாற்றுக் காலத் தொல்லியற் சான்றுகளில் இந்நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள பௌத்த மக்களின் சான்றுகள் விதந்து காணப்படுவதால் இவற்றை எடுத்துரைக்கும் விகாரைகள், பிறகட்டிட்டங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இத்தகைய தொல்லியற் சான்றுகளையும் பாளி-சிங்கள நூல்களையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நூல்களிற் கூட இக்காலப் பகுதியில் தமிழ் மக்களின் வரலாறு பற்றிக் கூறும் தொல்லியற் சான்றுகளுக்கோ அன்றிச் சிங்கள கலாசார வளர்ச்சியில் தமிழ்க்கலாசாரம் கொண்டுள்ள பங்கு பற்றியோ உரிய முறையில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

இவ்வாறு தமிழ் மக்களின் வரலாறு ஈழத்து வரலாற்று நூல்களில் உரிய இடத்தினைப் பெறாமைக்கு இன்னுமொரு காரணமும் இருந்தது. 20ஆம் நூற்றாண்டின் முக்காற் பகுதியின் இறுதியில் இருந்து தமிழ் மக்கள் சிங்கள மக்களின் மேலாண்மைக்குச் சவாலாக அமையும் வண்ணம் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளும் ஈழத்துச் சிங்கள வரலாற்றாசிரியர்களைமேற்கூறியவாறு ஈழத்து வரலாற்றினை அணுக வைத்தது. இத்தகைய அணுகு முறையின்மூலம் தமிழ் மக்களின் பழமை, பங்களிப்பு மழுங்கடிக்கப்பட, இந்நாடு சிங்கள மக்களுக்குரிய பூமி என்ற வாதம் முதன்மை பெற்றது.

எனினும் கடந்த கால் நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது 1967இல் அநுராதபுரத்திலும், 1970இல் கந்தரோடையிலும் பொம்பரிப்பிலும் மேற் கொள்ளப்பட்ட அகழ்வுகள் ஈழத்தின் நாகரிகத்தின் தோற்றம் பற்றியும், இத்தகைய நாகரிக வளர்ச்சியில் இந்நாட்டுச் சிங்கள-தமிழ் மொழி பேசுவோர் ஆற்றியுள்ள பங்களிப்புப் பற்றியும் பல அரிய தகவல்களைத் தந்துள்ளன.

இதன் விளைவாக ஈழத்து வரலாற்றினை மூன்று முக்கிய கால கட்டங்களாகப் பிரித்து இம்மூன்று கால கட்டங்களிலும் வாழ்ந்த மக்கள் பற்றியும், இந்நாட்டு நாகரிக வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புப் பற்றியும் உரியவாறு மதிப்பீடு செய்ய முடிகின்றது. இம்முப்பிரிவுகளில் முதலில் வருவதுதான் வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகும். இக்காலந்தான் எழுத, வாசிக்கத் தெரியாது அநாகரிக நிலையில் வாழ்ந்த கற்கால மக்களின் காலமாகும். இன்றைய 'வேடரின்' மூதாதையினரே இவர்களாவர்.

இக்காலத்திற்கும் வரலாற்றுக்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் இம் முப்பிரிவுகளில் இரண்டாவது இடத்தினைப் பெறும் வரலாற்றுதய காலமாகும். வரலாற்றுக் காலத்தின் பிரதான அம்சங்களான நகர வாழ்க்கை, கட்டிட அமைப்புகள், எழுத்தின் உபயோகம், நாணயம், சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு ஆகியன அரும்பத் தொடங்கிய காலமாகையால் இது இவ்வாறு பெயர் பெற்றது. இக்காலத்தினை இரும்புக் காலம் அல்லது பெருங்கற்காலம் என அழைப்பதும் உண்டு.

தென்னிந்தியா, ஈழம் ஆகிய பிராந்தியங்களின் நாகரிக கர்த்தாக்கள் இக்கால மக்களே, இவர்கள் தான் இன்றைய சிங்கள—தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினரான 'திராவிடர்' ஆவர். இவர்கள் வளர்த்தெடுத்த நாகரிகமே வரலாற்றுக்கால நாகரிகமாகும். இக்காலத்தினைச் சிங்கள அரசுகளின் தலைமைப் பீடங்களைக் கொண்டு பல்வேறு காலப் பிரிவுகளாக ஆராயும் மரபுண்டு. இத்தகைய தலைநகரங்களின் முதன்மை பெறுவது தான் அநுராதபுரமாகும். அநுராதபுர அரசின் காலம் கி.பி. 998 இல் அஸ்தமனமாகின்றது.

கடந்த கால் நூற்றாண்டாக ஈழத்துத் தொல்லியற்றுறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வுகளால் ஈழத்து நாகரிகம் பற்றியும், இந்நாகரிக வளர்ச்சியில் இன்றையத் தமிழ் பேசும்மக்களின் பங்களிப்புப் பற்றியும் இக்காலத்திற்கு முன்னர் இத்துறை பற்றி ஆராய்ந்த அறிஞர்களுக்குக் கிட்டாத பல சான்றுகள் வெளிவந்துள்ளன. அகழ்வாராய்ச்சித்துறைச் சான்றுகளை உறுதி செய்வனவாக ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டுகளான பிராமிக் கல்வெட்டுகள் அமைகின்றன. முன்பெல்லாம் இக்கல்வெட்டுகள் இந்நாட்டின் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்ததற்கான தடயங்களாகக் கருதப்பட்டன.

ஆனால் இக்கல்வெட்டுப் பற்றி மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வுகள் பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட தானங்களை எடுத்தியம்பும் அதே நேரத்தில் திராவிட மக்களின் பெரும்பகுதியினரானசிங்களமக்களின்மூதாதையினர் பௌத்த கலாசாரத்தின் ஊடுருவலால் பௌத்தர்களாக மாறியதை எடுத்துக் காட்டுவதோடு, பௌத்தத்தோடு ஈழம்

## B.B.C.யின் தமிழோசையை தினமும் ஆவலுடன் செவிமடுக்கும் அனைத்து தமிழ் நெஞ்சங்களிற்கும்

முற்றிலும் லண்டன் B.B.C.யின் தமிழ் ஓசை நிகழ்ச்சியை ஒத்த I.B.C.யின் தமிழ் சிற்றலையின் உறவுப்பாலம் என்ற ஒலிபரப்பு தினமும் காலை இந்திய நேரம் 5-30 மணி தொடக்கம் 6-30 வரை (இலங்கையின் நேரம் 6 மணி முதல் 7 மணி வரையும்) சிற்றலை 41 மீற்றர் 7475 கிலோ கெய்ட்சில் ஆசிய, தென் ஆப்ரிக்க மத்திய கிழக்கு நாடுகளுக்காக தினமும் ஒலிபரப்பாகிறது.

இந்நிகழ்ச்சியில் தினமும் இலங்கையின் முக்கிய பிரமுகருடனான செவ்வியும், செய்திகளும், அறிவியல் ஆய்வும் எம் முற்றத்து மல்லிகை என்ற பகுதிகளும் தொகுத்து மிகவும் தெளிவுடன் ஒலிபரப்பாகின்றது.

இதனை அனைவரும் கேட்டும் பயன் பெறவும், எமது நாட்டின் செய்திகளையும் உடனுக்குடன் அறிந்திடவும் வேண்டும் என்ற அவாவுடனேயே இத்தகவலை ஈழசுதந்திரன் மூலமாக அனைவர்க்கும் தெரிவிக்கின்றேன்.

தகவல்:
(டென்மார்க்கிலுள்ள சகோதரன் மூலமாக)
மலையூர் மனோ
ஆனைக்குட்டம் முகாம்
விருதை மாவட்டம்

www.padippakam.com



வந்த' வட இந்திய கலாசாரத்தின் தாக்கம் தவறுதலாக வட இந்தியாவிலிருந்து ஈழம் நோக்கி ஏற்பட்ட மக்களின் புலப் பெயர்வு எனவும் எடுத்துக் காட்டியுள்ளன. ஆகவே ஈழத்தமிழரின்பழைமைஇன்று ஏற்கப்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் தமிழரின் வரலாற்றை இங்குகிடைக்கும்பல் வேறு வகையான சான்றாதாரங்களாகிய பிராமிக் கல்வெட்டுகள், தமிழ்க் கல்வெட்டுகள், சிங்களக் கல்வெட்டுகள், கட்டிடங்கள், சிற்பங்கள் ஆகியவற்றைக் கொண்டு நிரைப்படுத்த முடிகின்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் கற்காலமாகவே காணப்படுகின்றது. இதன் காலம் கி.மு. 125,000-1000 வரையிலான காலப் பகுதியாகும்.[3] இந்தியாவில் இக்காலம் பல உட்பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதோடு இதன் ஆரம்பம் இன்றைக்கு ஐந்து லட்சம் வருடங்களுக்கு முற்பட்டதாகவும் கொள்ளப் படுகின்றது. ஈழத்தில் இக்காலத்திற்குரிய பிரிவுகள் எல்லாம் காணப்படாவிட்டாலும் கூட பழைய கற்காலம், இடைக் கற்காலத்திற்குரிய தடயங்கள் உள. பழைய கற்காலத்திற்குரிய தடயங்கள் வடபகுதியிற் காணப்பட்டாலும் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் தான் விதந்து காணப்படுகின்றன.

இடைக் கற்காலத்திற்குரிய தடயங்கள் யாழ். குடாநாடு தவிர்த்த ஈழம் முழுவதும் காணப்படுகின்றன. இக்காலக் கருவிகளை ஆக்குவதற்குப் பயன்படுத்தபட்ட 'குவாட்ஸ்' இனக்கற்கள் யாழ் குடாநாட்டில் காணப்படாததால் தான் இக்கால ஆயுதங்கள் இங்கு கிடைக்கவில்லை எனக்கூறப் படுகின்றது. எனினும் இக்கால ஆயுதங்களுக்கும் தமிழகத்தில் கிடைத்துள்ள கற்கால ஆயுதங்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையைக் கண்ட அறிஞர் இவற்றை ஆக்கிய மக்கள் தமிழகத்தில் இருந்து ஈழத்தினை அடைந்திருக்கலாமெனக் கருதுகின்றனர். இவர்கள் தான் இன்றைய வேடர்களின் மூதாதையினர் ஆகும். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக் மொழியாகும். இற்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகிய இக் கலாசாரம் கி. மு. 1000 வரை ஈழத்தில் நிலை கொண்டிருந்தது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும், வரலாற்றுக் காலத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியே வரலாற்று உதய காலமாகும். (கி. மு. 1000-259 வரை) இக்காலத்திற்றான் நம்நாட்டுக்கு நாகரிகத்தினை அளித்த மக்கள் இங்கு கால்வைத்தனர்.[5] பாளி சிங்கள நூல்களில் இச்செய்தி கட்டுக்கதையாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது. இக்கதைகளில் விஜயனும் அவனது கூட்டத்தினரும் இங்கு கால் வைத்தபோது இங்கு வாழ்ந்த மக்களான நாகர்களும், யக்ஷர்களும், அமானுஷ்யர்கள் என்றும், இவர்களில் நாகர்களின் இருப்பிடமாக விளங்கிய வட பகுதி 'நாக தீபம்' எனவும் அழைக்கப் பட்டுள்ளது. மேலும் இக்கதைகளில் நாகதீபத்தினை ஆண்ட அரசர்கள் பற்றிய குறிப்பும் உண்டு இக்கதைகளின் கதாநாயகர்களாக விஜயன், பண்டுகாபயன் போன்றோர் விளங்குகின்றனர். இவை கட்டுக் கதைகளே என வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக் கொண்டாலும் கூட இக்கதைகள் நம் நாட்டின் வறண்ட வலய பகுதிகளிலுள்ள ஆற்றோரங்களில் வட இந்தியாவில் இருந்து வந்த விஜயனதும் அவனது சந்ததியினரதும் குடியேற்றத்தையே எடுத்துக் காட்டுவதால் சிங்கள மக்களின் மூதாதையினர் இவர்களே எனவும் கூறுகின்றனர்.[6]

## 2. நாடும் மக்களும்

சிங்களமக்களின்மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து வந்தனர் என்பதற்கு ஆதாரமாக விளங்குவது வடஇந்தியாவோடு இவர்களை இணைக்கும் இடப்பெயர்களும், வம்சப் பெயர்களும் ஆகும். பாளி நூல்கள்கூட இவ்விடப் பெயர்களைக் குறிக்கின்றனவே அன்றி இவர்கள் வடஇந்தியாவிலிருந்து வந்தார்கள் எனக் கூறவில்லை. இவ்விடப் பெயர்களை ஆராய்ந்த அறிஞர்கள்தான் சிங்கள மக்களின் மூதாதையினரை 'ஆரியர்' என அழைத்து ஈழத்தின் ஆதிக்குடியேற்றங்களை ஆரியர் குடியேற்றங்கள் எனத் தமது நூல்களில் கூறியுள்ளனர்.[7] ஆனால் இவ்வாறு வட இந்தியாவுடன் ஈழத்து ஆதிக் குடியேற்ற வாசிகளைப் பாளி நூலோர் இணைப்பதற்குக் காரணம் விஜயன் கதை. பாண்டுகாபயன் கதை ஆகியவற்றுக்கான கருப்பொருள் இவர்களுக்குப் பரீட்சியமாக இருந்த ஜாதகக் கதைகளிலிருந்தே பெறப்பட்டமையாகும்.

இச்சிங்கள என்ற நாட்டின் பெயருக்கு கொடுக்கப் பட்ட விளக்கமாகவே விஜயன் கதையும் இக்காலத்தில் முன்னிலை பெற்றது என்றும், இக்கதையை ஜாதகக் கதைகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்த புகழ் பூத்த வரலாற்றாசிரியரான மென்டிஸ் கூறியிருப்பது ஈண்டு நினைவுகூரற்பர்லது.[8] இவர் மேலும் இக்கதையினை ஈழத்தில் ஆதிலேற்பட்ட சிங்கள மக்களின் குடியேற்றத்திற்கு ஆதாரமாகக் கொள்ள முடியாதெனவும் கூறி முடித்துள்ளார்.

பாளி நூல்கள் விஜயனின் தந்தை சிங்கபாகு சிங்கத்தை கொன்றதால் அவனின் சந்ததியினர் சீகள, (சிம்கள) என அழைக்கப்பட்டனர் எனக் கூறுகின்றன.[9] ஆனால் சீகள என்ற வடிவத்தில் இரு பகுதிகள் உண்டு. ஒன்று 'சீ' மற்றது 'கள' ஆகும். (சீ+கள) 'சீ' என்றால் பாளி மொழியில் சிங்கத்தைக் குறிக்கும் 'கள' என்றால் 'கொல்லல்' என்று பொருள்படும். இக் கருத்துக்களை மையமாக வைத்து விஜயனின் சந்ததியினராகிய சிங்களவருக்கும் சீகள, சிங்கள என்ற பெயர் இடப்பட்டது போல் தெரிகின்றது. நாட்டுக்குக் கொடுக்கப்பட்ட பெயராக நாளடைவில் விளக்கம் கொடுக்கப்பட, சிங்கள மக்கள் தனித்துவமானவர்கள் என்ற இன உணர்வு ஏற்படத் தொடங்கியது. எவ்வாறு யாழ்ப்பாணம் என்ற பெயருக்கு கொடுக்கப்பட்ட விளக்கமாக யாழ்பாடிக்கதை உருவானதோ அவ்வாறு சீகள என்ற நாட்டின் பெயருக்குக் கொடுக்கப்பட்ட விளக்கமாகவே விஜயன் கதை உருவானது எனலாம். இதனால் நம்நாட்டின் பழைய பெயரான ஈழம் என்ற பெயர் திரிபடைந்து 'சிறி' என்ற அடைமொழியுடன் சேர்ந்து சீகள என்ற பாளி வடிவமாகவும், சிம்கள என்ற வடமொழி வடிவமாகவும் வளர்ச்சியடைந்தது என்பது ஏற்புடைய் கருத்தாகிறது.[10]

தமிழ் நூல்கள் கடற்கோள்கள்' பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களும் இச்சந்தர்ப்பத்தில்மனம்கொள்ளத் தக்கது. தமிழ் நூல்கள் கடல் கோள்களால் அழிந்ததாகக் கூறும் பிரதேசங்களான ஏழ் தெங்கநாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ் பின்பாலை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகாரை நாடு, ஏழ் குறும்பனை நாடு ஆகிய பிரதேசங்களில் ஒரு பகுதியாக ஈழமும் இருந்திருக்கலாம் போல் தெரிகின்றது. காரணம் 'ஈழம்' என்ற சொல்விற்கும் 'ஏழ்' என்ற சொல்விற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. மேற் கூறிய நாடுகள் அழிய 'ஈழம்' மட்டுமே எஞ்சியது போற் தெரிகின்றது.

இக்கட்டுக்கதைகளில்கூட வடகிழக்கு மாகாணங்கள் இடம் பெற்றிருப்பது அவதானிக்கத்தக்கது. வடநாட்டு விஜயன் மணந்த பெண் பாண்டி நாட்டு இளவரசி எனக் குறிக்கப்பட்டுள்ளது. விஜயனின் மனைவியாகிய இவ் இளவரசி வந்திறங்கிய துறைமுகமாகமன்னார்மாவட்டத்திலுள்ள மாந்தை குறிக்கப் படுகின்றது. பாளி நூல்கள் இதனை 'மாதித்த' (மகாதீர்த்த)என அழைக்கின்றன[12] இதன் பொருள் பெருந்துறை என்பதாகும். அத்துடன் விஜயன் வந்திறங்கிய இடம் தம்பபண்ணி எனவும் அழைக்கப்பட்டுள்ளது. பின்னர் இது நாட்டினது பெயராகவும் மாறியுள்ளது எனவும் பாளி நூல்கள் கூறுகின்றன.[13] இவ்விடம் மன்னார் மாவட்டத்திலுள்ள அருவியாற்றின் கரையில் அமைந்துள்ளது என இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது.[14] இவ்விடத்தின் பெயராகிய 'தம்பபண்ணி' கூட வடமொழி வடிவமாகிய தாம்ரவர்ணி என்ற வடிவமே எனவும், இவற்றின் மூலவடிவம் தமிழ் வடிவமாகிய பாண்டி நாட்டிலுள்ள 'பொருனை' ஆறு எனவும் கொள்ளப்படுகின்றது.[15] 'தண்பொருனை' தான் தம்பபண்ணி என்ற பாளிவடிவமாகி ஈற்றில் 'தாம்ரவர்ணி' என்ற வடமொழி வடிவத்தினைப் பெற்றது எனவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண வைபவமாலை ஆசிரியர் விஜயன் வந்திறங்கிய இடமாகக் கதிரைமலையை குறிப்பிட்டு இது ஈழத்தின் மத்தியபகுதியிலிருந்தது எனக் கூறியுள்ளார்.[16] ஆனால் வட பகுதியின் அரச மைய பீடமாக விளங்கிய கதிரைமலை (கந்தரோடை) பற்றிக் கேள்விப்பட்ட இவர், இக்கதிரைமலையைத் தாம் வாழ்ந்த காலத்தில் (கி. பி. 18ஆம் நூற்றாண்டில்) பிரபல்யம் பெற்று விளங்கிய கதிரைமலையுடன் (கதிர்காமத்துடன்) இணைத்து வடபகுதிக்குரிய கதிரைமலையை நாட்டின் மத்திய பகுதியில் அமைந்திருந்த கதிரைமலை எனத் தவறுதலாக இனங்கண்டுள்ளார் போலத் தெரிகின்றது. மட்டக்களப்பு தமிழகத்தினை உள்ளடக்கிய உரோகணை என்ற பெயரும் இப்பகுதியிலுள்ள 'தீகவாபி' என்ற பெயரும் விஜயனின் கூட்டாளிகளால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றங்களாகும்.[17] விஜயன் மட்டுமன்றி விஜயனின் பின் அரசு கட்டிலேறிய அவனின் சகோதரன் சுமித்தவின் மகனாகிய பாண்டுவாசுதேவ, அவன் மனைவி பட்ட கச்சன ஆகியோர் வந்திறங்கிய துறையாகத் திருகோணமலைத் துறைமுகம் அறிஞரால் இனங் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. பாளி நூல்கள் இதனை 'கோகர்ண' என அழைக்கின்றன.[18]

பாண்டிநாட்டு இளவரசியுடன் வந்த 700 தோழியரும் விஜயனின் 700 நண்பர்களை மணந்ததாக மகாவம்சம் கூறும் செய்தியை நோக்கும் போது இவர்களே இந்நாட்டின் நாகரிக கர்த்தாக்கள் எனப் பாளி நூல்கள் கூறுவதை அவதானிக்கும் போதும் ஆதி ஈழத்து நாகரிக வரலாற்றில் தமிழ் மக்கள் பெற்றிருந்த முக்கியத்துவம் புலனாகின்றது இவ்வாறே விஜயனின் பின் அரசு கட்டிலேறிய மன்னர்கள் பலர் பண்டுவாசுதேவ, பண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# பெண்களைத் தகைமைப்படுத்தும் பணி

எமது சமுதாயத்தில் பெண்கள் தொடர்ந்தும் நலிந்த நிலையில் இருப்பதை மாற்றி அமைக்கும் முகமாக எமது கழகம் முகாம்களில் உள்ள அகதிப் பெண்களை தகைமைப் படுத்தும் முயற்சியில் சில வருடங்களாக ஈடுபட்டு வருகிறது. இம்முயற்சியை மேன்மேலும் வலுப்பெறச் செய்வதற்காக ஒவ்வொரு மண்டலத்திலும் பெண்கள் தகைமைப்படுத்தல் பகுதிகளை ஏற்படுத்தி, அப்பணிக்கு முழு நேரத் தொண்டர்களை நியமிப்பது எனவும், களப்பணியின் போது முழு நேரத் தொண்டர்களுக்கு உதவியாக செயல்பட மாவட்ட ரீதியாக பகுதி நேரத் தொண்டர்களை நியமிக்கவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நியமிக்கப்படவுள்ள தொண்டர்கள் தங்களது சேவைகளை சிறப்பாகச் செய்திட அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சியின் போது, பெண்களைத் தகைமைப்படுத்துதல் பற்றியும், ஆற்றுப்படுத்துதல் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப் பட்டு, களப் பணியில் மாதர்களைத் திரட்டி, அவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி-ஒருங்கிணைத்து-வளர்ச்சியடையச் செய்யத் தேவையான பயிற்சிகளை அவர்களுக்கு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று நாள் முழு நேரப் பயிற்சி முதல் கட்டமாகவும், அதனைத் தொடர்ந்து களப்பணி பயிற்சியும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று சேவையாற்றவுள்ள பெண்களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் மாதர் சங்கங்கள், மண்டல பொறுப்புக் குழுக்கள், மாவட்ட நலப்பணி மற்றும், கல்வித் துறைத் தொண்டர்கள் உதவ வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இச்செய்தியை அனைத்து முகாம்களிலும் வெளியிட்டு முன்வரும் பெண்களை, உடன் கழகத்திற்கு மனுச் செய்ய ஊக்குவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மனுக்கள் இம்மாத இறுதிக்குள் மண்டல அலுவலகங்களுக்கூடாக தலைமையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மனுச் செய்வோரை நேர்முகம் காண உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டும் பயிற்சியில் நல்ல முறையில் பயனடைந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு, முழுநேரத் தொண்டுக்கு அல்லது பகுதி நேரத் தொண்டுக்கு நியமிக்கப் படுவார்கள்.

மேற்படி சேவைக்கும் பயிற்சிக்கும் மனுச் செய்வோர் தங்கள் மனுவில் தெரிவிக்க வேண்டிய விவரங்கள் அதற்கான படிவத்தில் தரப்பட்டுள்ளன.

ஈழத் தமிழ் அகதிப் பெண்களைத் தகைமைப்படுக்தும் எமது முயற்சியில் அனைவரும் ஒத்துழைத்து, பெணகளைத் தகைமைப்படுத்தும் திட்டத்தில் உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

சி. சூரியகுமாரி
செயலாளர்
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்
சென்னை-8.

www.padippakam.com



# ஈழத் தமிழர் வரலாறு...

9-ம் பக்கம் தொடர்ச்சி)

காபய போன்ற பெயர்களைச் சூடியிருந்தனர். மகாவம்சத்திற்கு காலத்தால் முந்திய தீபவம்சத்தில் 'பண்டுகாபய' (பகுண்ட) எனவும் இவனின் பிராமணஆசிரியன் 'பண்டுல' எனவும் விளிக்கப்படுகின்றான். சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் இவ் ஐதீகங்கள் வடநாட்டிலிருந்து ஈழம் நோக்கி ஏற்பட்ட புலப்பெயர்வுகளை எடுத்துக் காட்டுவதாகக் கொண்டு பாளி நூல்களில் 'பண்டு' என்ற பெயருடன் காணப்படும் மன்னர்கள் வடநாட்டிலுள்ள 'பண்டு' வம்சம் வந்தவர்களாகையால் இவ்வாறு அழைக்கப்பட்டனர் எனவும் கொள்கின்றனர்.

பாளி நூல்களில் தமிழகப் பாண்டியர் 'பண்டு' என அழைக்கப்படுவதை நோக்கும் போதும் விஜயனில் மனைவி மட்டுமின்றி விஜயனின் தோழரின் மனைவியர் கூட பாண்டிய நாட்டிலிருந்து வந்தனர் என்ற மகாவம்சத்தின் குறிப்பினை நோக்கும் போதும் இப் 'பண்டு' என்ற பெயர் தமிழகத்துப் பாண்டியரையே குறித்து நின்றது எனலாம்.19 இவ்வாறே ஈழத்தின் பழைய பெயராகிய தம்பபண்ணிகூட பாண்டிய நாட்டிலிருந்து, தண்பொருனை ஆற்றங்கரையிலிருந்து இங்கு குடியேறிய மக்களால் இடப்பட்ட பெயர் எனக் கொள்ளலாம். பெருந்துறையின் பாளி வடிவமாகிய 'மாதித்த' என்ற பதம் கூட பாண்டி நாட்டிலுள்ள திருப்பெருந்துறையை நம்மன கண் முன்னே நிலை நிறுத்துகின்றது.

இவ்வாறு மேற்கூறிய செய்திகள் கட்டுக்கதைகளாக இருந்தாலும் கூட கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் ஈழத்தில் தமிழ் மக்களின் நடமாட்டம் ஏற்பட்டதையே இவை உருவகப்படுத்துகின்றன எனக் கொள்ளலாம். மேலும் இக்கதைகள் கூறுவது போல் இம்மக்கள் கூட்டத்தினர் வட இந்தியாவிலிருந்து ஈழம் வந்ததற்கான தொல்லியற் சான்றுகள் இன்றுவரை இங்கே கிடைக்கவில்லை. கிடைக்கின்ற தொல்லியற் சான்றுகளும் தென்னிந்தியாவைப் போலவேஈழத்திலும் ஆதியில் தென்னாட்டுத் திராவிட மொழிகளைப் பேசிய மக்கள் கூட்டத்தினரே வாழ்ந்தனர் என எடுத்துக்காட்டியுள்ளன 20. இம்மக்கள் விட்டுச் சென்ற தொல்லியல் எச்சங்கள் 'பெருங்கற்காலப் பண்பாடு' எனத் தொல்லியலாளரால் அழைக்கப்படுகின்றன.

### 3.பெருங்கற்கால நாகரிகமும் திராவிட அடிப்படையும்

பெருங்கற்காலத் தொல்லியற் சின்னங்கள் பாளி சிங்கள நூல்கள் கூறும் ஆதிக் குடியேற்றங்கள் நடந்த இடங்களில் காணப்படுவதை நோக்கும் போது தென்னாட்டில் இருந்து அன்று ஏற்பட்ட சிங்கள நூல்கள் வடநாட்டிலிருந்து ஏற்பட்ட புலப்பெயர்ச்சியாகக் கொண்டுள்ளமை தெரிகின்றது. பெரிய கற்களை அமைத்து ஈமச் சின்னங்களை அமைத்ததால் இக்கலாச்சாரம் பெருங்கற் காலப் பண்பாடு எனப் பெயர் பெற்றது. ஆனால் கற்களால் அமைக்கப்படாத சவ அடக்கங்களும் தாழியடக்கங்களும் இப்பகுப்பில் அடங்கத் தவறவில்லை. காரணம் இவை யாவற்றுக்குமிடையே இழைவிட்டோடும் பிற கலாசார அம்சங்களாகும்.

இவ்வம்சங்களிற் கறுப்புச் சிவப்புநிற மட்பாண்டங்கள்; இரும்பாயுதங்கள், பிற வெண்கலப் பொருட்கள், அணிகலன்கள் ஆகியன அடங்கினாலும் இக்கலாச்சாரத்திற்குத் தனித்துவத்தினை அளிப்பவனாக மக்கள் குடியிருப்புகள், ஈமச் சின்னங்கள், குளங்கள், வயல்கள் ஆகியன விளங்குகின்றன. இத்தகைய ஓர் அமைப்பினையே தென்னிந்திய பெருங்கற்காலக் கலாச்சாரத்திலும் காண்பதால் அக்கலாச்சாரத்தின் படர்ச்சியே ஈழத்துப் பெருங்கற் காலமெனவும் கொள்ளப்படுகின்றது.

ஈமச் சின்னங்களை அவற்றின் தோற்றத்தினைக் கொண்டு கல்லறைகள், கல்மேசைகள், கல்வட்டங்கள் போன்ற பலப்பல பிரிவுகளாக அறிஞர்கள் பிரித்துள்ளனர். இம் மக்கள் வாழ்ந்த வசிப்பிடங்கள் அவர்கள் அமைத்த ஈமச்சின்னங்கள், சவ அடக்கங்கள், வயல்கள், குளங்கள் ஆகிய நான்கு அம்சங்களும் இக்கலாச்சாரத்தின் முதுகெலும்பாக விளங்கின. மக்கள் வசித்த இடங்களாக அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை, மாகம (திசமகாரம) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் இவை ஆதியில் ஒரே பொதுத் தன்மையான கலாச்சாரப் பண்பைக் கொண்டிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

இதே போன்று இவற்றுக்கும் ஈமச்சின்னங்களை உள்ளடக்கிய அடக்கமுறைகளுக்குமுள்ள தொடர்பினை புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு, மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆனைக்கோட்டை காரைநகர் (சத்திராந்தை) ஆகிய இடங்களிலும் அநுராதபுர மாவட்டத்திலுள்ள திவுல்வேவ, குருகல்கின்ன போன்ற இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது கிடைத்த பொருட்கள் உறுதி செய்கின்றன.21

பொதுவாக இவற்றுக்கும் தென்னிந்தியாவில் அதிலும் தமிழகத்தில் கிடைத்த இத்தகைய பொருட்களுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமை அவதானிக்கத்தக்கது. இத்தகைய சின்னங்களில் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்படாதலவயாக மாமடுவலில் காணப்படும் கல்வட்டங்கள், கல்லறைகள், மட்டக்களப்பு தமிழகத்திலுள்ள கதிரவெளியில் காணப்படும் கல்வட்டங்கள், கல் மேசைகள், கல்லறைகள் ஆகியனவும் குறிப்பிடத்தக்கன. இக்கலாசாரத்திற்குரிய மக்களின்எலும்புக்கூடுகள் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பில் கிடைத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த அறிஞர் இவற்றுக்கும் தென்னிந்தியாவிலுள்ள திராவிட மொழி பேசும் மக்கள் கூட்டத்தினருக்குமிடையேயுள்ள ஒற்றுமையை எடுத்துக்காட்டியுள்ளனர்.22

இதனைவிட மன்னாரில் கிடைத்த எலும்புக் கூட்டினை ஆராய்ந்தோரும் இத்தகைய முடிவுக்கே வந்துள்ளனர். ஆனைக்கோட்டை எலும்புக் கூட்டுக்குமிடையே அமைப்பு ரீதியாகக் காணப்படும் ஒற்றுமை மேலும் இவ்வெலும்புக் கூடும் திராவிட மக்களாதே என்பதனை எடுத்துக் காட்டியுள்ளது. இதனை இதனோடு கிடைத்த வெண்கலத்திலான முத்திரையும் உறுதி செய்கின்றது. இம் முத்திரையின் வாசகம் கோவேதன், கோவேந்தன். கோவேதம் என இனங் காணப்பட்டுள்ளது. 25

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது வரலாற்றுதய காலப் புலப்பெயர்ச்சி தென்னிந்தியாவிலிருந்து ஏற்பட்டதென்பதும்,இதனை உருவாக்கியவர்கள் திராவிட மக்களே என்பதும் இன்று சிங்கள, தமிழ்மொழி பேசுவோர் இவர்களின் வழித்தோன்றல்களே என்பதும் தெளிவாகின்றது. இவர்களுடன் ஈழத்தின் கற்கால மக்களாகிய வேடர்களின் மூதாதையரும் கலந்து உருவாகியதே இன்றைய ஈழத்து நாகரிகமாகும் 26. இதனால் ஈழத்தின் வரலாற்று உதயகால நாகரிகத்தினை வித்திட்டு வளர்த்தவர்களும் இவர்களேயாகும்.

சங்க இலக்கியங்கள் பேசும் பழந்தமிழரின் ஈமச் சின்னங்களும் கிரியைகளும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றன. இப்பெருங் கற்காலக் கலாசாரத்திலிருந்து உருவாகிய மொழிகளே தென்னிந்தியாவில் இன்று பேசப்படும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகும். இப் பின்னணியில் நோக்கும் போது ஈழத்தில் ஒன்றுக்கு காணப்பட்டதும் புலனாகின்றது. சிங்கள மொழியின் மூல மொழியாகிய எலு, தமிழ்மொழி ஆகியன இவற்றுட் குறிப்பிடத் தக்கனவாகும்.

சிங்கள தமிழ் மொழிகளுக்கிடையே காணப்பட்ட அடிப்படை ஒற்றுமை பௌத்த மதத்தோடு வந்த பாளிமொழியின் செல்வாக்கால் சிங்களம் தனியான ஒரு போக்கில் செல்லுமுன்னர் அது திராவிட மொழிக்குரிய பண்புகளுடன் விளங்கியதை எடுத்துக்காட்டியுள்ளது.27 அத்துடன் சிங்கள-தமிழ்ச் சமூகங்களிடையே நிலவும் உறவு முறைப் பெயர்கள் கலாசார அம்சங்கள் ஆகியனவும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

பௌத்தத்தைத் தழுவு முன்னர் சிங்கள மக்களின் மூதாதையினர் இந்துக்களாகவே விளங்கினர். இதனை ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.28 இவை பௌத்த மதத்திற்கு மக்களால் அளிக்கப்பட்ட குகைத் தானங்களை எடுத்துக் காட்டும் அதே நேரத்தில் இவர்கள் சூடியிருந்த பெயர்கள் இவற்றை அளித்த மக்களின் பழைய இந்து சமய நம்பிக்கைகளை எடுத்துக் காட்டுகின்றன. துரதிர்ஷ்டவசமாக இத்தகைய குகைக் கல்வெட்டுக்களில் பெரும்பகுதி வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தான் காணப்படுகின்றன. காரணம் இம்மாகாணங்களில் குகைகளை ஆக்குவதற்கான கருங் கற்பாறைகள் குறைந்து காணப்பட்டதே எனலாம். இக்கல்வெட்டுக்களின் வரிவடிவம் பிராமி வரிவடிவம் ஆகும்.

தென்னிந்தியாவில் பௌத்த மதத்திற்கு அளிக்கப்பட்ட தானங்களை எழுதப் பயன்படுத்தப்பட்ட இவ்வடிவம் வடஇந்தியாவிலே இருந்து தான் பௌத்தத்தோடும் அதன் மொழியாகிய பாளி பிராகிருத மொழியோடும் ஈழம் வந்ததென நம்பப்பட்டாலும் இவ்வரிவடிவம் வருமுன்னரே தமிழகம் ஈழம் ஆகிய பகுதிகளில் இதற்கு முன்னர் ஒரு பிராமி வரிவடிவம் காணப்பட்டதை அறிஞர்கள் இனங் கண்டு கொண்டுள்ளனர்.29 இவ்வரிவடிவத்தை தென்னிந்தியத் திராவிட30 தமிழ் வரிவடிவம்31 என இனங்கண்டு கொள்கின்றனர். பௌத்தத்தோடு வந்த வடஇந்திய வரிவடிவத்தின் செல்வாக்கால் இது நாளடைவில் செல்வாக்கு இழந்ததனையும் ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

வரிவடிவத்தைப் போன்றே இங்கு நிலை கொண்டிருந்த மொழிகளாகிய தமிழ் எலு ஆகியவற்றின் சில பழைய வடிவங்களும் கிறிஸ்தாப்த காலத்தின் முடிவில் பிராகிருத வெள்ளத்தில் அமிழ்ந்ததையும் பாளி பிராகிருத மொழியில் அமைந்திருந்த இக்கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. 32 இத்தகைய பழைய வடி கியங்களிற் காணப்பட்டதும் ஈண்டு அவதானிக்கத் தக்கது. இவற்றில் ஒன்றுதான் 'பருமக' என்ற வடிவமாகும்.

இதன் மூலத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளாத பலர் இது வடமொழி வடிவமாகிய 'பிரமுக' என்பதன் திரிபு என தவறாக எடுத்துக் காட்டியுள்ளனர் ஆனால் இப் பிரமுக என்பது தான் இன்று தமிழில் 'பிரமுகர்' என்று வழங்கப்படுவதை நோக்கும் போது இக்கல்வெட்டுக்கள் கூறும் பிரமுகவின் மூலம் வேறாகவே தென்படுகின்றது. இதனைத்தான் சங்க நூல்கள் பருமகன் பெருமகன் என அழைக்கின்றன. இவற்றோடு ஒத்த ஒரு பழைய வடிவம்தான் 'பருமக' ஆகும். பெருமான், பெம்மாள் பெருமான், பருமக்கள் ஆகியன இதனின்றும் மருவிய வடிவங்களே. கிறிஸ்தாப்தத்துக்கு முன்னுள்ள 1000க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் இவ்வடிவம் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

இப்பட்டத்தினைச் சூடியோர் சங்க இலக்கியங்கள் கூறுவது போல் நாட்டு நிர்வாகத்தில் முதுகெலும்பாக விளங்கிய மக்கள் கூட்டத்தினராகும்.33 இதே போன்று சங்க இலக்கியங்கள் கூறும் 'பரத' 'பரதவர்' என்ற குழுக்களும் இக்கல்வெட்டுக்களில் கிட்டத்தட்ட பத்திலொரு பகுதியில் பரத, பட என்ற வடிவங்களாக நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்றன.34

இவ்வாறே வேள்.35 ஆய்36 போன்ற குறுநில மன்னர்களும் பிற தமிழ் வடிவங்கள் பலவும் இவற்றில் இடம் பெற்றிருப்பதால் ஈழம் முழுவதும் பௌத்தம் வருமுன்னர் இன்றையச் சிங்கள-தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினர் பழைய திராவிட மொழியாகிய எலு, தமிழ் ஆகியவற்றைப்பேசினர் என்பதும் இவர்களில் பௌத்த மதத்தினைத் தழுவிய எலு மொழி பேசியோர் பௌத்த பிராகிருத மொழிச் செல்வாக்கால் தனியான மொழி கலாசார பண்பாடு பெற்றவர்களாகவும், இதனைத் தழுவாத மக்கள் கூட்டத்தினர் பழைய மரபுகளைப் பேணியவர்களாகவும் பிரிந்து செல்லத் தொடங்கினர் எனலாம் இச்சம்பவம் பல நூற்றாண்டுகளாக நடைபெற்ற நிகழ்வாகும்.

(அடுத்த இதழில்)

---

## அருங்காட்சியகம்

மாகி பார்க்கில் சரித்திர பிரசித்திப் பெற்ற அருங் காட்சியகம் ஒன்று உள்ளது. 1950ஆம் வருடம் மொரிஷியஸ் நாடு வெளியிட்ட ஒரு ஸ்டாம்பில் அந்த அருங் காட்சியகத்தின் படம் காணப் படுகிறது.

—சுப்பையா

---

## எவரெஸ்ட் வெற்றி

எவரெஸ்ட் சிகரம் நினைவாக, 1977ஆம் வருடம் நேப்பாள நாடு மூன்று ஸ்டாம்புகளை வெளியிட்டது. அதில் எவரெஸ்ட் சிகரம்—கஞ்சன் செங்கோ மற்றும் அன்னபூர்ணி போன்ற மலைகளின் படம் அச்சாகியிருந்தது.

—சுப்பையா

www.padippakam.com



# கவிதைச் சரம்

மன்னார் வழியாக

யாழ். செல்ல

## பள்ளிக்குடாவில் வீதியோரங்களில் பல்லாயிரமவர் தங்கி அவதி

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னி பெரு நிலப் பரப்பில் இருந்து மன்னார் வழியாக யாழ் மாவட்டம் செல்வதற்கு வந்த ஆயிரக்கணக்கானோர் பள்ளிக்குடாவில் வீதியோரங்களிலும் மரங்களுக்கு கீழும் தங்கியிருந்து பெரும் அவதிப்படுகின்றனர்.

உயிலங்குளத்தில் உள்ள இராணுவத்தினர் யாழ் மாவட்டம் செல்கின்ற எவரும் உள்ளே வருவதற்கு அனுமதிக்காததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

காடுகளில் மரங்களுக்கு கீழ் தங்கியிருக்கின்ற இந்தக் குடும்பங்களின் சிறுவர்கள் குழந்தைகள் குடிதண்ணீர் இன்றியும் சுகாதார சீர்கேட்டினாலும் நோய்க்கு ஆளாகியுள்ளனர். உணவுப் பொருள்களுக்கும் இப்பகுதியில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

உயிலங்குளம் இராணுவ முகாமில் வவுனியா வருவதற்கு தற்போது சுமார் 300 பேர் வரை அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் உயிலங்குளத்தில் இருந்து வவுனியா வருவதற்கு போதிய பஸ் வண்டிகள் இல்லாமையினால் பிரயாணிகள் நெருக்கமாக அடைக்கப்படுகின்றனர்.

பேருந்து வண்டி ஒன்றில் சுமார் 150பேர் வரை நெருக்கமாக அடைக்கப்படுவதாகவும் காலை பத்து மணிக்கு பஸ் வண்டியில் ஏறினால் பிற்பகல் 3 மணிக்குத்தான் பஸ் வண்டி புறப்படுவதாகவும் புதுக்குடியிருப்பில் இருந்து வவுனியாவுக்கு வந்தவர்கள் தெரிவித்தனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தை அங்கிருக்கும் மேற்பார்வையாளர் கவனித்திருக்க வேண்டும். அவள் அருகில் வந்து அந்த கனிவான மனிதர் கேட்டார். "என்னம்மா சிஸர் சரியாக வெட்டவில்லையா?" அவரின் இதமான கேள்வியால் நினைவுகளிலிருந்து மீண்டு தன் நிலைக்கு வந்தவள்... "இல்ல அங்கிள் நன்றாகவே வெட்டுகிறது" என்று கூறிப் புன்னகைத்து விட்டு தன் வேலையில் மும்முரமானாள், அவளும் சுமைகளை சுகமாகத் தாங்கிக் கொள்ளும் ஒரு புது அனுபவத்தோடு!

## புறப்படுவீர் நங்கையரே புத்துலகு படைத்திட!...

செல்வி. ப. கிருமாலினி

இ.அ. முகாம், குடியாத்தம்

நுனி நாக்கு ஆங்கிலத்திலே
வனிதா மணியாய் தமிழ் உடலிலே
நடமாடும் நங்கையரே!

நமது திறமைகள் எல்லாம்
வளையல் கடைகளின்
வாசல்களிலே விரயமாவதா?

சிந்தனைகள் சவளிக் கடைகளின்
கண்ணாடிப் பெட்டிகளில்
அடகு வைக்கப் படலாமா?

அறிவுத் தேடல்கள் திரையரங்குகள்
அளவில் மட்டுமே அலைமோதலாமா?

நான்கு சுவர்களுக்குள்
செக்குமாடுகளாய் வட்டமிட்டது போதும்
வாருங்கள் வெளியில்! வானைப் பாருங்கள்!
சுகப் பறவைகள்! சுதந்திர ராஜ்ஜியம்!

நத்தைகளாய்ச் சுருங்க வேண்டாம்
நடக்கப் பழகுங்கள்! பறக்கப் பழகுங்கள்!
நமது சமுதாயம் சிறக்க உழையுங்கள்!

கருத்துக் குழந்தைகளை கருத்தரியுங்கள்
பிரசவிக்கும் புதுமைகளுக்குத் தடைகள் வேண்டாம்
கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமே என்றால்
வெட்டி எறியுங்கள்! விண்வரை உயருங்கள்!

கண்களுக்கு மைதீட்டி கயல்களாக்கியதால்
அவை எப்போதும் கண்ணீர்க்குளத்தில் மிதக்கின்றன
பேனாக்களுக்கு மை ஊற்றி
புரட்சிகளைப் படைப்போம்!

கயமைச் சமுதாயம் கால்களை கட்டிப் போடலாம்
அடிவயிற்றில் அக்கினியை வளர்த்து
மூட அரண்களை முற்றிலும் எரித்து விடுங்கள்!

சார்ந்து வாழ்ந்த சரித்திரங்கள் போதும்
அடிமையாய்க் கிடந்த அத்தியாயங்கள் போதும்
புறப்படுங்கள் புது வரலாறு எழுத!

கல்வியிலும் கலைகளிலும் தொழில்களிலும்
ஆணுக்குப் பெண் தாழ்வில்லையெனும்
மானுயர் புத்துலகை மலர்த்திடுவோம்!

(ஆசிரியரால் திருத்திச் செம்மையாக்கப்பட்டது)

## இந்தியத் தாய்க்கோர் விண்ணப்பம்!

-தமிழீழதாசன்-

பல்லவி

இந்தியத் தாயே! இந்தியத் தாயே!-உன்
ஈழ மக்களைப் பாராயோ?-யாம்
சிந்திய இரத்தம் போதாதோ!-இச்
சேய்களைக் காப்பாற்றக் கூடாதோ? (இந்திய)

சரணங்கள்

முந்திய நாளில் ஆந்நியர் என்று
முழுக் குடியுரிமையும் பறித்தார்
செந்தமிழ் மக்களைக் கள்ளத்தோணிகள்
என்றே கூறிப் பழித்தார்
உந்தனுடன் செய்த ஒப்பந்தம் அனைத்தையும்
ஒருதலைப் பட்சமாய்க் கிழித்தார்
உன்மகள் மார்பில் சிங்கள ஸ்ரீயை
தார்கொண்டு எழுதிச் சிரித்தார் (இந்திய)

கல்வியைப் பறித்துத் தமிழ் இளைஞரைக்
கருவி ஏந்திட வைத்தார்
தொல்வரலாற்று நூல்களை எரித்து
எம் வரலாற்றை மறைத்தார்
பொல்லாச் சிங்களக் குடியேற்றத்தால்
பூர்வீகத் தமிழ்மண் சிதைத்தார்
எல்லாவற்றிலும் இலங்கை ஆட்சியினர்
என்றும் எம்மைப் புறக்கணித்தார் (இந்திய)

எப்பொழுதும் இலங்கை முப்படைக்கிலக்கு
இங்கும் அங்கும் தமிழர்தான்
சொற்பம் அல்ல சிங்களப் படையால்
தொலைந்து போன தமிழ் உயிர்கள்தான்
அற்பமாகவே இந்துக் கோயில்களை
அழித்துப் புரோகிதரை மிதித்தார்
கற்பனையல்ல இந்தியப் பகைவரைக்
கண்ணை மூடிக்கொண்டு துதித்தார் (இந்திய)

நலம் இழந்ததால் பழந்தமிழ்க்குடி
நாளும் நாளும் புலம் பெயர்ந்தார்
உளம் விரும்பாதோர் அகதிகளாக
உள்நாட்டிலும் பலம் இழந்தார்
தலம் தவறாமல் ஷெல்லடி குண்டடி
தமிழ்மண் எங்கிலும் மிதிவெடி
நிலைமை மாறாது நீதலை யிடாமல்
நிற்குமோ இந்தத் தலையிடி (இந்திய)

## மங்கலம் நல்லாட்சி நிலவிடவே மாண்புடன் சித்திரை மகளே வாழ்க!

டாக்டர். கவிமணி ச. ஆறுமுகநாதனார்
21, வேல் நாச்சியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை-600 078.

பங்குனி பெற்ற பசுங்கொடியே
பகர்ந்திடும் சித்திரைப் பூங்கொடியே
தங்க நிறத்துத் தளிர்க்கொடியே
தமிழ் மணம் பரப்பும் தமிழ்க் கொடியே

எங்கிலும் இன்பம் நிறைந்திடவே
எழில்திங்கள் மும்மாரி தனைப் பொழிந்தே
மங்கல நல்லாட்சி நிலவிடவே
மாண்புடைய சித்திரை மகளே வாழ்க!

சங்கத் தமிழ்தந்த எட்டுத்தொகை
தகைமையாம் பத்துப் பாட்டுடனே
மங்கலப் பதினெண்கீழ்க் கணக்குடனே
மாண்பான் இலக்கியம் தமிழரிடை

இங்கித மாகவே போதித்து
எல்லோரும் உறவினர் எனும் உணர்வு
தங்கிட இறைவன், குலமொன்றெனச்
சாற்றிடும் சித்திரை மகளே வாழ்க!

மதம், சாதி, கட்சி வெறிகளினால்
மனிதரை மனிதரே அழிப்பிக்கும்
இதயம் இல்லாக் கொடுஞ்செயலை
எவரும் செய்யாமல் அமைதியூட்டும்

மதியான கதிரவன் பேரொளியை
மனத்திடைப் பாய்ச்சி மடமையிருள்
பதியாமல் நீக்கித் தமிழகமும்
பாரத நாடும் சிறந்திட வாழ்க!

பெண்ணுக்கு உரிய பெருமையெல்லாம்
பெற்றிடும் சிறந்த உரிமைகளை
கண்ணுள்ளே கண்ணாய் ஆண்களுமே
கருதிச் செய்து மேன்மைதந்தே

திண்ணமாய் வள்ளுவர் திருக்குறளை
தேசிய நூலாய் ஆக்குவிக்கும்
வண்ணமாம் செயலை விரைவாக
வடித்திடச் சித்திரை மகளே வாழ்க!

செந்தமி ழுடனே பாரதத்தில்
திகழும்பத் தொன்பது திருமொழியும்
இந்தியத் தேசிய மொழியாக
இனிதே விரைவில் வந்திடவே

வந்துள்ள நடுவண் அரசதுவும்
வகையான திட்டம் வகுப்பித்து
சிந்தை மகிழச் செய்விக்க
சித்திரை மகளே வாழ்கவே!

போற்றும் நடுவண் அரசதுவின்
புனிதப் பிரதமர் கவிஞர்பிரான்
சாற்றும் வாஜ்பாய் அவர்களதின்
தகைமை வாய்ந்த அரசதுவும்

ஏற்றம் பெற்று உலகிடையே
இனிய நல் வரலாறு படைத்திடவே
போற்றி மலர்மாரி தனைப் பொழிந்து
பூரித்துச் சித்திரை மகளே வாழ்க!

படிப்பகம்

www.padippakam.com



# போரில்சாவோரைவிட போதையில் சாவோரே இலங்கையில் அதிகம்

### அரசு வெளியிடும் திடுக்கிடும் தகவல்

இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதியில் கடுமை மையான யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளை யில் இங்கு நாளாந்தம் ஏற் படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு இருக்கின்றன. அதில் குழந்தைகள், சிறுவர் கள், பெரியவர்கள் உட்பட்ட மக்கள் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்படுகின்றார்கள். இப்படியான ஒரு நிலையில் அதிர்ச்சி தரும் தகவல் ஒன்றை அரசாங்கம் வெளி யிட்டுள்ளது. யுத்தத்தினால் நாளாந்தம் இறப்பவர்களின் எண்ணிக்கையை விட சாரா யம பாவனையினால் நாளாந் தம் இறப்பவர்களின் எண் ணிக்கை அதிகரித்து இருக் கின்றது என்பது இந்தத் திடீர் தகவலாக இருக்கின்றது.

## ஆணைக்குழு

சாராயம், சிகரட் மற்றும் சட்ட விரோதமான போதைப் பொருட்களின் பாவனை தொடர்பாக ஆராய்வதற்காக 1997-ஆம் ஆண்டு அரசாங் கம் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நிய மித்தது. இதன் சிபாரிசுகள் அமைச்சர்களுக்கு கொடுக்கப் பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடக்கும் யுத்தத்தினால் இறப்பவர் களின் தொகையைவிட சாரா யம் சிகரட் மற்றும் சட்ட விரோத போதைப் பொருட் களினால் (பாவனையினால்) தென்பகுதியில் அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங் களுக்கு வெளியில் இறப்பவர் களின் எண்ணிக்கை 6 மடங் காக இருக்கிறது எனக் குழு வினர் சுட்டிக் காட்டியுள்ள னர்.

உண்மையில் சிகரட் பாவனையாளர்களில் 80 சத விகிதமானவர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள் ளனர். இதே நேரம் சிகரட், பீடி புகைக்காதவர்களில் 27 சதவிகிதத்தினர் இதனால் தாக்க முறுகின்றனர். இதற்கு புகைப்பிடிப்பவர்களினால் வெளியிடப்படும் புகையைச் சுவாசிப்பதே காரணமாயிருக் கிறது.

## நசிப்பூட்டும் கசிப்பு

1996-ஆம் ஆண்டுக் கணக்கின்படி 3200 பேர் இரு தய நோயினால் இறந்திருக் கின்றுர்கள் எனக் கண்டறியப் பட்டுள்ளது. இலங்கைச் சட்ட வரையறைக்கு உட் பட்ட முறையில் சாராயம், சிகரட் ஆகியவற்றை உற் பத்தி செய்து விநியோகிப் பதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. இலங்கையில் மாறி மாறி ஆட்சி அமைக்கும் அரசாங்கங்கள் தங்களது வரவு, செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படும்போது, அதனைச் சமாளிப்பதற்காக சிகரட், சாராயம் ஆகியவற் றின் மீதான விலைகளை அதி கரிக்கின்றது. இதனால் இவைகளின் விலைகள் கூடு கிறது. சிகரட், சாராயம் ஆகிய வற்றில் விலைகள் அதிகரிப் பதனால் சாதாரண வருவாய் யுள்ள பாவனையாளர்கள் குறைந்த விலையில் கிடைக் கக் கூடிய, சட்ட விரோதச் சாராய சிகரட்டுக்களை நாடும் நிலைக்குத் தள்ளப்படுகின் றார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால், சிகரட் மீதான விலை அதிகரிப்பு கள்ளச் சாராய உற்பத்தியை ஊக்குவிப்பதாகவே அமைக் கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இப் பொழுது கசிப்பு என்று அழைக்கப்படும் கள்ளச் சாராய உற்பத்தி நாடளாவிய ரீதியில் அதிகரிக்கின்றது என்றுதான் கூறவேண்டும். இதற்குப் பாதாள உறவுக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர் களும், ஒரு சில பொலிசாரும் உடந்தையாக இருக்கின்றார் கள் என்பதும் நிருபணமாகி யுள்ளது.

## சமூகப் பிரச்னை

உண்மையில். சாராயம் சிகரட் பாவிப்பதினால் ஒருவர் படிப்படியாகக் சொல்லப்படு கிறார். அதாவது ஒருவரது ஆயுசு காலம் குறைகிறது என லாம். ஆனால் கசிப்பு மற்றும் சட்ட விரோதப் போதைப் பொருட்களின் பாவனையால் ஒருவர் உடனடியாகக் கொல் லப்படும் நிலையும் ஏற்பட்டு இருக்கின்றது. சாராயத்தில் கலப்படம் செய்ததினால் அண்மையில் மட்டக்களப்பு பகுதியில் 60க்கும் மேற்பட்ட வர்கள் கொல்லப்பட்டனர். இதைக் கள்ளச் சாராயத் தால் ஏற்படும் விளைவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். சாராயப் பாவனை, புகைத்தல் சட்ட விரோதப் போதைப் பொருள்கள் போன்றவற்றை தடைசெய்து சட்டங்கள் இயற்றுவது நன்று. விலை அதிகரிப்பினால் தடுத்து விட முடியாது. நடைமுறை ரீதியிலான அணுகு முறை களில் இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணலாம்.

சாராயம், சிகரட் போன்ற வற்றின் விளம்பரங்கள் வானொலி, தொலைக் காட்சி கள் போன்ற எலக்ரோனிக் தொடர்பு சாதனங்களில் தடை செய்யப்பட்டிருக் கின்றது. ஆனாலும் இந்த யுகங்களில் மறைமுகமான விளம்பரங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆகவே இப்படி யான விளம்பரங்கள் முற்றா கத் தடை செய்யப்படுவதே நல்லது. ஏனென்றால் விளம் பரங்களால் சிறு வயதினர் கவரப்பட்டு பாவனைக்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள் என்று ஆய்வுகளால் அறிவிக் கப்படுகின்றன. இந்தச் சமூ கப் பிரச்சினைக்குத் தண்டனை கள் வழங்குவதினாலேயோ, சட்டங்கள் இயற்றுவதினா லேயோ தீர்வு காணமுடியாது மக்கள் அறிவு பயன்படுத்தப் படவேண்டும். இது அரசாங் கத்தின் கடமையும் கூட. அத னாலேயே இதற்கு ஓரளவு தீர்வு காணமுடியும்.

—பி.பி.சி. தகவல்

ஈரோடு ஈ.ஏ.ம.க. மண்டல அலுவலகத்தில்

# தன்னார்வ நலக்குழு நலப்பணியாளர் சந்திப்பு

தமிழ்நாடு தன்னார்வ நலக்குழு மேற்கு மண்டல அலு வலகப் பிரதிநிதி திரு. தனபால். 17-3-98 அன்று ஈழ ஏதி லியர் மறுவாழ்வுக் கழகத்தின் ஈரோடு மண்டல அலுவலகம் சென்றிருந்தார். நலப்பணியாளர்களுக்கு என்ன என்ன பயிற்சிகள் தேவையோ அதனை நாம் அவர்களுக்கு வழங்கி வருகின்றோம். நமது நிறுவனம் அரசு சாரா மற்றையத் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து இயங்கி வருகின்றது என்று திரு. தனபால் அப்போது கூறினார்.

சுய அடுமுகத்தை தொடர்ந்து பல்வேறு அகதி முகாம் களிலிருந்து வந்திருந்த பணிகளை பற்றி எடுத்துக் கூறி னார்கள்.

நலப்பணியாளர்களுக்கு என்ன என்ன பயிற்சி வேண்டும் என்று திரு. தனபால் கேட்டார். அதற்கு நலப் பணியாளர்கள் கூறியவை:

1. முதலுதவியில் கழகம் நமக்கு பயிற்சிகள் வழங்கி யிருக்கின்றன, இருந்தும் நாம் மேலதிகப் பயிற்சியினைப் பெற விரும்புவதாகக் கூறினார்கள்.

2. மக்களுடன் நகப்பணியாளர்களின் அணுகு முறை எவ்வாறு இருக்கவேண்டும் என்று கேட்டதற்கு, திரு. தன பால் மக்களை கவரக் கூடிய வகையில் எப்படி நாம் எடுத்து கூறுவது என்று கற்று தருவதாகக் கூறினார்.

3. ஊசி போடத்தெரியாது என்று நலப்பணியாளர்கள் சொன்னதற்கு, அதற்கும் பயிற்சி கொடுப்போம் என்று திரு. தனபால் கூறினார்.

4. இனப்பெருக்க மண்டல நோய் பற்றி தெரியுமா என்று திரு. தனபால் கேட்டதற்கு, கழகத்தால் கற்றுக் கொடுத்திருக்கின்றார்கள். இருந்தும் மேலதிகமாக அறிந்து கொள்ள விருப்பம் இருப்பதாக நலப்பணியார்கள் கூறினார் கள். மற்றும் பிரசவம் பார்க்க விரும்பம் இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

5. குடி போதையில் இருந்து மீள்வது எப்படி, இள வயதுத் திருமணம் இவற்றை தவிர்த்துக்கொள்வது எப்படி என்று எல்லாம் பயிற்சி கொடுப்பதாக திரு. தனபால் கூறி னார்.

6. முகாம்களில் இடநெருக்கடி. மலசலக்கூடம் இன்மை. தண்ணீர் வசதியின்மை போன்றவையும் பேசப் பட்டது.

தற்கொலை முயற்சியில் இருந்து மீள்வது எப்படி? அவற்றுக்கான பயிற்சிகளையும் தாம் வழங்கி வருவதாகக் கூறினார்.

# கப்பல் சேவைக்காக வவுனியாவில் 1630 பேர் காத்திருக்கின்றனர்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 761 குடும்பங்களில் 1630 பேர் குடாநாட்டிற்கான கப்பல் சேவையை எதிர் பார்த்து வவுனியாவில் காத்தி ருக்கின்றனர்.

யாழ் மாவட்டத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை யைத் தொடர்ந்து அங்கிருந்து இடம் பெயர்ந்து வந்து வவுனி யாவில் நண்பர்கள் உறவினர் கள் வீடுகளில் இவர்கள் தங்கி யுள்ளனர்

## மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்

கடந்த வருடம் ஐப்பசி மாதம் தொடக்கம் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியில் கப்ப லுக்காக பதிவு செய்துள்ள இம் மக்கள் நாள்தோறும் குடா நாட்டிற்கான கப்பல் சேவை எப்போது ஆரம்பமாகும் என பிரதேச செயலகத் திட்டமிடல் உத்தியோகத்தர்களை விசாரித்த வண்ணமுள்ளனர்.

கடந்த சில நாட்களாக வவுனியா பிரதேச செயலக திட்டமிடல் அலுவலகத்தின் முன்பு இவர்கள் காலையில் இருந்து நண்பகல் வரை குழுமியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

## இராணுவத் தருப்பு

இதே வேளை இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இருந்து மன்னாருடாக யாழ் குடாநாட் டிற்கு கப்பல் மூலம் செல் வதற்கு வந்த ஆயிரக்கணக் கானோர் உயிலங்குளத்தில் உள்ள இராணுவத்தினரால் உள்ளே வர அனுமதிக்கப்பட வில்லை. இதனால் இவர்கள் பள்ளிக்குடாவிற்கும் உயிலங் குளத்திற்கும் இடைப்பட்ட இடங்களிலுள்ள பொது இடங் களிலும் ஆலயங்களிலும் மர நிழலிலும் தங்கியிருந்தனர்.

## தங்குமிடம் திரும்பிய மக்கள்

இந்த இடங்களில் உணவு தண்ணீர் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிய தாலும் அடிப்படை வசதிகள் இல்லாததனாலும் இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தாங்கள் தங்கியிருந்த இடங் களுக்குச் சென்றுவிட்டனர்.

## அரச அதிபருக்கு மக்கள் மனு

அதே நேரம் வவுனியா வில் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்கள் தங்களை விரைவாக யாழ் குடாநாட் டுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா அரசாங்க அதி பருக்கு மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர்.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பில் இருந்து வவுனியா வந்து சேர்வதற்கு பிரயாணி ஒருவருக்கு பிரயா ணக் கட்டணமாக 700 ரூபா அறவிடப்படுகிறது. இராணுவ கட்டுப்பாடற்ற வன்னியில் மனிதாபிமான முறையில் மினி பஸ்களில் மக்கள் ஏற்றப்படு கின்றனர். இராணுவக் கட்டுப் பாட்டிலுள்ள உயிலங்குளத் தில் மனிதாபிமான மற்ற முறையில் மக்கள் ஆடு, மாடு களைப் போல நெருக்கமாக அடைக்கப்படுகின்றனர் என வும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத் தீவு, புதுக்குடி யிருப்பு பகுதிகளில் அத்தியா வசிய உணவுப் பொருள்களுக் கும் தட்டுப்பாடு நிலவுகின்றது வைத்தியசாலைகளில் மருந்து களுக்கு தட்டுப்பாடு நிலவுகின் றது.

நோயாளர்களை மருந்து களை தனியார் கடைகளில் வாங்கி வருமாறு டாக்டர்கள் துண்டு எழுதிக் கொடுக்கின்ற னர் மண்ணெண்ணெய் 1 போத் தல் 100 ரூபாவாகவும், தேங்கா யெண்ணெய் 1 போத்தல் 170 ரூபாவாகவும் பனடோல் ஒன்று 5 ரூபாவாகவும், தீப்பெட்டி ஒன்று ஒன்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின் றது.

படிப்பகம்

www.padippakam.com



# பாக்கிஸ்தானிடம் இலங்கை இராணுவ உதவி கோரிக்கை

## அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழு வருகை

வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு பாக்கிஸ்தானின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது,

அண்மையில் பாக்கிஸ்தான் சென்று திரும்பிய சக்தி, மின்சக்தி அமைச்சரும் பாதுகாப்பு பிரதி அமைச்சருமான ஜெனரல் அநுருத்த ரத்வத்த, பாக்கிஸ்தான் பிரதமர் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியபோது புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு பாக்கிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கோரிய போது, அது குறித்து சாதகமாகப் பரிசீலிக்கப்படுவதாக பாக்கிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். விஸ்தரிப்பு

இதனடிப்படையில் இலங்கைக்கான இராணுவ ரீதியான பயிற்சி வழங்கல் வசதிகளை பாக்கிஸ்தான் மேலும் விஸ்தரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனரல் ரத்வத்தை மேற்கொண்ட பேச்சுக்களையடுத்து பாக்கிஸ்தான்பச்சைக் கொடி காட்டியுள்ளது. இத்னையடுத்து பாதுகாப்புத் துறை உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று இஸ்லாமாபாத் புறப்படும்" என சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளசர்.

பாகிஸ்தானிலுள்ள இராணுவ பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கும் பயிற்சியாளர்கள் ப்ற்றிய விபரங்கள் என்பன உத்தியோகத்தர்கள் மட்டத்திலான கலந்தாலோசனைகளை அடுத்து இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## ஷெரீபுடன் சந்திப்பு

மேலும் தமது விஜயத்தின் போது பாதுகாப்பு பிரதி அமைச்சர், பாகிஸ்தானில் இருந்து இராணுட தளபாடங்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் கொள்வனவுகள் தொடர்பாக ஏதேனும் பேசினாரா என்பது குறித்து எதுவும் அறியப்படவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஜெனரல் ரத்வத்த தனது விஜயத்தின் போது பிரதமர் நவாப் ஷெரீப், பாதுகாப்பு அமைச்சர் லெப்டினன்ட் ஜெனரல் இப்திகார் அலிகான் ஆகியோரை சந்தித்து உரையாடியபோது, கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களின் போது பலியான அப்பாவி பொதுமக்கள் தொடர்பாக தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டதாகவும் தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஐந்து உயர் அதிகாரிகள் இலங்கை வந்துள்ளார்கள். அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தில் இராணுவ ஆலோசகர்களாக கடமையாற்றும் இவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்தனர். அமெரிக்க அதிகாரிகள் முப்படை தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

பொலிஸாருக்கு தீவிரவாத தடுப்பு பயிற்சிகளை வழங்க பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுருவுடனான சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் பாக்கிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையை இந்த அமெரிக்க அதிகாரிகள் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

# தகவல் தொடர்பு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றுள், பண்பாடு மற்றும் மனநிறைவுக் கோட்பாடு (Uses & Gratification Approach) சமுதாயக் கற்றல் கோட்பாடு (Social Learning Theory), விளைவுகள் கோட்பாடு மற்றும் விளைவுகளில்லாக் கோட்பாடு (Theory of Effects & No effects Theory) என்பவற்றை அடக்கலாம்.

### *பயன்பாடு மற்றும் மனநிறைவுக் கோட்பாடு*

தனிநபர்கள், தம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து தம்முடைய குறிக்கோள்களை அடைவதற்குத் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் வழிமுறையின் ஆய்வு வெளிப்பாடே பயன்பாடு மற்றும் மனநிறைவுக் கோட்பாடாகும். மக்கள் தம்முடைய சூழலில் கிடைக்கக் கூடிய தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தத் தெரிவு செய்து கொள்கின்றனர். அவர்கள் அந்தத் தெரிவுகளைச் செய்வது ஏன் என்று அவர்களைக் கேட்பதாகவும், அவர்களுடைய தேவைகள் நிறைவு பெற்றனவா என்று முடிவு செய்வதாகவும் இக் கோட்பாடு உள்ளது,

தகவல் தொடர்பு சாதனங்களின் விளைவுகள் யாவை என்று வினா எழுப்புவது சரியல்ல. மாறாக, 'தகவல் தொடர்பு சாதனங்களுடன் மக்கள் என்ன செய்கின்றனர்?:' என்றவாறான வினா வலியுறுத்தப்பட்டது. நம்முடைய தேவைகளையும், விருப்பங்களையும் தகவல் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு நிறைவு செய்கின்றன? நம்முடைய கல்வி; அரசியல் வாழ்க்கை, பண்பாட்டு உலகம் எனுமிவற்றுல் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கு என்ன? நம்முடைய சமுதாய முன்னேற்றத்திற்குத் தகவல் தொடர்பு சாதனங்களை எப்படி நல்முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்? இவையே ஆய்வு அடிப்படைகளாகும்.

### *சமுதாயக் கற்றல் கோட்பாடு*

சமுதாயத்திற்கு மாறானதும் (antisocial), சமுதாயத்திற்கு ஆதரவானதுமான (prosocial), பழக்க வழக்கத்தின் மீது தகவல் தொடர்பு சாதனங்களின் தாக்கங்களைச் சோதிக்க நாம் முற்படும் போது, முன் மாதிரியாகக் கொள்ளுதல் (modeling), போலச் செய்தல் (imitation), இனங் கண்டுகொள்ளல் (indentification), என்பனவற்றின் பங்கு பற்றி விவாதித்தல் வேண்டும்.

### *விளைவுகள் கோட்பாடு மற்றும் விளைவுகளில்லாக் கோட்பாடு*

விளைவுகள் கோட்பாடு என்பது, பிற சக்திகளுடன் தகவல் தொடர்பின் பின்னிய செயல்விளைவினைப் (interaction) பேசுவதாக உள்ளது. விளைவுகளில்லாக் கோட்பாடு விளக்குவதற்குச் சற்றுக் கடினமானது. சில கோட்பாட்டாளர்கள், வலிமையினைப் பெறுதலே தகவல் தொடர்புப் பொதுவிளைவு விளைவுகளின்மை'யைப் பெறுதலாகும் என்கின்றனர். இன்னும் பிறரைப் பொறுத்தவரையில் விளைவுகளின்மையைப் பெறுதல் என்பது ஒரு விளைவினைப் பெறுவதாகும்.

(தொடரும்)



# சந்தியில் சந்திக்கிறார்கள்

சுப்பர் : டேய் பச்சைக்காரர் மறைஞ்சு போட்டினம்... நீ...வா இஞ்ஞாலை.

சோமர் : சிரிப்பான ஒரு விசயம் வடமராட்சிக் கடலில் நடந்திருக்குது என்ணெண்டு தெரியுமே?

சுப்பர் : உங்களுக்கு எப்பவும் என்னைத் தவிக்க விடுறது விளையாட்டாய்ப் போச்சு. விசயத்தைச் சொல்லுங்கோ அண்ணை.

சோமர் : டேய், பருத்தித்துறைக் கடலில் அங்குள்ள மீனவர்கள் ஒரு 20, 25 போட்டுகளில் போய் மீன் பிடித்துக் கொண்டு இருந்தவையாம். திடீரெண்டு கடற்படைப்படகு ஒன்று அதிவேகமாக வந்து மீன்பிடித்துக் கொண்டிருக்கிற படகு ஒன்றுடன் அடிச்சுப் போட்டினமாம். வழமையாய் செய்வது போல் அடிதடி ஒண்டும் ஆட்களுக்கு இல்லையாம். அடிபட்ட படகில் இருந்த மீனவர்களைக் காப்பாற்றி மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் எல்லா உதவியும் அவையளே முன்னிண்டு செய்து விட்டினமாம்.

சுப்பர் : அண்ணை "சோழியன் குடும்பி சும்மா ஆடாது அண்ணை" உந்தக் கடல் பகுதியிலைதான் இரண்டு கப்பல்கள் பொடியன்களால் அடி வாங்கியது. இனியும் அது நடக்காமல் இருக்க வேண்டும் எண்டு உந்த ஆட்கள் சொல்லித் தருவினம் எண்ட ஒரு நப்பாசையும் தான்.

சோமர் : போன முறை நீங்கள் சொன்னமாதிரி அமெரிக்க ஆட்கள் வெளியில போகபாக்கிஸ்தான் ஆட்கள் உள்ள வந்திருக்கினமாம்.

சுப்பர் : ஓமோம், ஓமோம். அது உண்மைதான். இந்தியாவில் ஆட்சி மாறி இருப்பது இலங்கையருக்கு ஒரு மாதிரித்தானாம். ஏதேனும் அந்தரங்கமான முடிவுகள் எடுத்துப் போட்டால் என்ன செய்யுறது எண்டும் யோசிக்கினமாம். ஒருவேளை அயல்நாட்டில் நம்பிக்கை இல்லாமல் தான் பாக்கிஸ்தானை அழைச்சிருக்கினமோ தெரியேல்ல.

சோமர் : அண்ணை எல்லாரும் தமிழ் ஆட்கள் மேல நல்லாப் பழகினம் போல இருக்கு. அதுசரி கிழக்கு மாகாண வாகனங்கள் கொழும்புக்குள் போறதை நிப்பாட்டிப் போட்டினமாமே.

சுப்பர் : எல்லாம் குண்டு வெடிப்புப் பயம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து வருகிற வாகனங்களில் தானாம் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் யோசிக்கின்றனவாம். உதாலதான் மன்னார் வவுனியா மட்டகளப்பு போன்ற பகுதிகளில் இருந்து வருகிற வாகனங்களை கொழும்புக்குள்ள விடுகிறதில்லை என்டே முடிவெடுத்திருக்கினமாம்.

சோமர் : ஏனண்ணை வடக்கைப் பிரிச்ச மாதிரி இப்ப கிழக்கையும் பிரிக்க போகினமே?

சுப்பர் : நீ பிரிப்பு என்று கதைச்ச உடனதான் எனக்கு ஞாபகம் வருகிறது. கொழும்பு மற்றும் தென்பகுதியில் இருந்து வாற ஆட்களுக்கு 7 நாள் மட்டும்தான் தங்கியிருக்கிற (விசா) பாஸ் எண்டு சொல்லிக் கொடுக்கினமாம் இதுவும் ஒரு பிரிப்புதானே.

சோமர் : ஏனண்ணை பேசாமல் பிரிச்சுக் குடுத்திட்டுப் போக வேண்டியதுதானே.

சுப்பர் : நீயும் ஆட்சியில இருந்திருந்தா உனக்கு அதன் அருமை தெரியும். நீ எங்க...சுத்திச் சுத்தி சுப்பற்றை கொல்லைக்குள்ளதானே.

சோமர் : அங்க பார் குபீர்...போல கிடக்கு நட... நட...

படிப்பகம்

www.padippakam.com



# வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 3 மாத காலத்தினுள் 34 பேருக்கு உதவிகள்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பல முகாம்களில் வதிவோர் சுய தொழில் உதவிகள் பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து மார்ச் மாத முடிவுவரை ஆண் பெண், மற்றும் விதவைகள் உட்பட 34 பேருக்கு வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோழி வளர்ப்பு, மிள காய்த்தூள் வியாபாரம், பெட்டிக்கடை, தையல் பகுதி, தச்சுத் தொழில், மீன் பிடித் தொழில், கருவாடு வியாபாரம், ஐஸ்கிறீம் வியாபாரம், காய்கறி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட சுயதொழில்முயற்சிகளுக்காக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வருவாய் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெற விரும்புவோர் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் சுயதொழில் முயற்சி பற்றிய விபரமான மனு ஒன்றினை எழுதி அந்த முகாமில் இருக்கும் நிர்வாகக் குழு, மற்றும் நலப்பணியாளர், மாணவர் மன்றம் ஆகியவற்றின் பரிந்துரையுடன்மாவட்ட சமூக சேவையாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

சுய தொழில் ஊக்குவிப்பு உதவிக்கு விண்ணப்பிப்போர் தாம் இருக்கும் முகாமில் ஏற்கனவே வேறு நபர்கள் அந்த தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்தால் அவ்வாறான உதவிக்கு தொடர்ந்தும் விண்ணப்பம் செய்வதை தவிர்க்க வேண்டும்.

மற்றும் தாம்மேற்கொள்ள இருக்கும் தொழில் மூலம் விற்பனை வாய்ப்பு இருக்கிறதா எனவும், லாபம் தரக் கூடிய தொழிலா எனவும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் மனு மாவட்ட சமூக சேவையாளர் ஊடாக மண்டலப் பொறுப்பாளருக்கு பரிந்துரைக்கப்பட்டு மண்டலப் பொறுப்பாளர் பரிந்துரையுடன்தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். தலைமை அலுவலகத்தில் விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு உதவி செய்யக்கூடிய தொழில் முயற்சியாக இருந்தால் அவர்களுக்கு உடனடியாக உதவிகள் வழங்கப்படும்.

வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் சுயதொழிலுக்கு ஏற்ப பொருளாகவே வழங்கப்படும். பொருட்களுக்குரிய பெறுமதியை அதற்குரிய சிறிய வட்டியுடன் பத்து மாத காலத்தினுள் கழகத்துக்கு மீளளித்தல் வேண்டும். அவ்வாறு மீளளிக்கும் பணம்அதே முகாமில் மற்றுமொருவர் சுய தொழில் தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

எவ்வளவு கூடிய விரைவில் மீளச் செலுத்தல் தொகையை கழகத்துக்கு செலுத்துகிறார்களோ அவ்வளவு விரைவில் அதே நபர் அல்லது மற்றுமொரு நபரோ உதவி வாய்ப்பை பெறக் கூடியதாக இருக்கும்,

மற்றும் சுயதொழில்கோரி விண்ணப்பம் செய்பவர்கள் மேலே கூறப்பட்ட நடைமுறைக்கேற்ப விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கான உதவிகளும் காலதாமதம் இன்றி கிடைக்க வாய்ப்பேற்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் அடுத்த இதழில் அறிந்து கொள்ளலாம் அல்லது மாவட்ட சமூக சேவையாளரிடம் அறிந்து கொள்ளலாம். நேரடியாக தலைமை அலுவலகத்துக்கு மனுக்கள் அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

## நியூட்டன் புத்தகம்

லா ஆப் கிராவிட்டி என்ற புத்தகத்தை எழுதியவர் ஐஸக் நியூட்டன். அந்த புத்தகம் வெளிவந்து 300 வருடம் ஆனதைச் சிறப்பிக்கும் வகையில் ''கிரேட் பிரிட்டன்'' நாடு24-3-1980அன்று தபால் தலை வெளியிட்டுள்ளது.

## வெற்றியின் சின்னம்

யுத்த காலத்தின் போது வெற்றியின் சின்னம் வி' (V) என்ற கோஷம், எங்கும் பரவியிருந்தது. இதனை நினைவு கூறும் வகையில் ''V for VICTORY'' என்ற கோஷத்தையே, ஸ்டாம்பில் அச்சடித்து, 1943 ஆம் வருடம் ''நிக்கரக்குவா'' என்ற நாடு வெளியிட்டு உள்ளது.

தரவு: சுப்பையா

# ஈழத்தமிழர் பிரச்சினையை இந்தியா-இலங்கை மறுபடியும் எவ்வாறு கையாளப் போகின்றன?

-கேயாரி-

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஜூலை மாதம் இலங்கைக்கு போகிறார் என்பதும், பிரதமர் பதவி ஏற்று முதல் முறையாக அண்டை நாடான இலங்கைக்கு செல்கிறார் என்பதும் ஈழத்தமிழர்களுக்கு ஒரு நல்ல செய்தியாக இருந்தாலும், தொடரும் நடவடிக்கைகள் நல்லபடியாக அமைய வேண்டும் என்பதும் உலகத் தமிழர்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த கருத்தாகும்.

ஜூலை மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பத்தாவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் இலங்கை செல்கிறார் என்பது ஒரு புறமிருக்க, 1983ம் ஆண்டு ஜூலை இனப்படுகொலை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு பதினைந்தாவது ஆண்டில் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அங்கு செல்வது இலங்கையில் நடைபெற்ற கடந்த கால நிகழ்வுகளை நினைவூட்டலாம்.

ஈழத்துப் பிரச்சனையில் மிக மிக ஆர்வம் காட்டிய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் அவர்கள் மற்றும் தமிழகக் குரல்களாக ஒலித்துக் கொண்டிருந்த வை. கோபால்சாமி, தலித் எழிமலை போன்றோரும் இன்றைக்கு ஆளும் கட்சியில் அமர்ந்திருக்கும் இவ்வேளையில் கொழும்பில் சார்க் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிய விவாதமும் முக்கிய இடம் பெறலாம் எனவும் நம்பப்படுகிறது.

அமெரிக்காவின் சமாதானப்படைகள் எனக்கூறப்பட்ட அமெரிக்கப் படையினர் இலங்கையில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து இந்திய நாட்டுக்கு எதிரான போக்கு கொண்ட பாகிஸ்தான் இராணுவத்தினரையும் இலங்கைக்கு அழைப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினராலும், இலங்கைப்படையினராலும் மிக மிக மோசமாகத் துன்புறுத்தப்பட்ட ஈழத்தமிழர்கள் தொடர்ந்து வந்த அமெரிக்கப் படையின் ஆலோசனையையடுத்து இலங்கைப் படையினரால் தமிழ் மக்களை கண்மூடித்தனமாக அழித் தொழித்தனர்.

அதுமட்டுமல்லாமல் இஸ்ரேலியப் படைகளாலும் தாக்கப்பட்ட தமிழ்மக்கள் இனிமேல் பாகிஸ்தானியப் படைகளாலும் தாக்கப்படப் போகிறார்களா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் சார்க் மாநாடு ஜூலை மாநாடு ஆரம்பமாகப் போகிறது. சார்க் மாநாடு ஆரம்பமே ஈழத் தமிழர் பிரச்சனை தீர்வதற்கான மற்றுமொரு ஆரம்பக் கட்டமாகவும் கருதலாம்.

இலங்கை அதிபர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களும் இலங்கைப்படையைகொண்டு விடுதலைப்புலிகளை அடக்க முடியாத நிலையையும், நாளாந்தம் பல கோடி ரூபாய் போர்த்தளவாடங்களுக்காகவும், போர்ப் படைகளுக்காகவும் செலவழிக்க முடியாத நிலையையும் உணர்ந்து ஈழத்தமிழர் பிரச்சனையை தீர்க்க இதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும்.

இந்திய அரசும் கடந்த கால நிகழ்வுகளையே நினைத்துக் கொண்டிருக்காமல் பல்வேறுபட்ட வாழ்க்கையில் வாழ்ந்து சொந்த இடங்களில் இருந்து அடித்து விரட்டப்பட்டு இன்று பத்துக்கு பத்து சதுர வீட்டிற்குள் புழுங்கி அழிந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களைப் பற்றியும் சிந்திக்கத் தவறக் கூடாது.

இதே போல் பல்வேறுபட்ட போராளிக்குழுக்களும்' போர் நடைமுறைகளை மாற்றி இராஜதந்திர ரீதியில் செயல்பட்டு இதனை ஒரு சாதக நிகழ்வாகப் பயன்படுத்தி ஈழத்துப் பிரச்சனைக்கு தீர்வுகளைக் கொண்டு வரலாம்.

கடந்த காலப் போராட்டங்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்து விட்டார்கள்; பல லட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள். பல குடும்பங்கள் இன்று கண்ணீரும் கம்பலையுமாக காடுகளிலும் மேடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஈழத்துக் கலாச்சாரங்கள் அழிந்தொழிந்து போகின்றன. ஈழத் தமிழினம் சரியான தலைமையின்மையால் தறிகெட்டுப் போகும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல் சொல்ல முடியாத இழப்புகளும், சோகக் கதைகளும் தொடர்கதைகளாகின்றன.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வேண்டாமா? வெண்ணை ''திரண்டு வரும் வேளையில் தாழி'' உடைந்த கதையாக இருக்கக் கூடாது என மக்கள் நினைக்கிறார்கள்.

ஈழத்துத் தமிழர்கள் பிரச்சனை தீர்வதற்கு இந்திய மத்திய மாநில அரசுகளை சகலரும் வலியுறுத்த வேண்டும். சுயநல போக்கிற்காகவும் சுய லாப நோக்கிற்காகவும் தமிழர் தலைகளை அடகு வைப்பதை இனியும் தமிழ் அரசியற் கட்சிகள் தவிர்த்திட வேண்டும். காலம் காலமாக தமிழினம் அழிந்து போவதையும், சிங்கள அரசாங்கம் தமிழர்கள் மேல் குண்டுகள் போடுவதையும் தவிர்த்திட வேண்டும். மீண்டும் அனைத்துக் கட்சிகளும், போராளிக்குழுக்களும் அமரும் பேச்சு வார்த்தைக்கான சூழலை இந்தியா-இலங்கை அரசுகள் ஏற்படுத்த வேண்டும். அதற்கான தடைகளையும் இரண்டு அரசுகளும் அகற்றிட வேண்டும்.

அரசியல் இலாபம் கருதாமல் ''அந்தோ தமிழர்கள் அழிகிறார்கள் அவர்களை அரவணைப்போம், அவர்களுக்கு வாழ்வளிப்போம்'' என்ற நோக்கிப் அனைவரும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

வரும் ஜூலை மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையாக மாறாமல் இருக்கவேண்டியதையும் மறந்து விடக் கூடாது.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் கண் பார்வை சம்பந்தமான குறிப்புச் சீட்டின் உண்மைப் பிரதியை பெற்றுக் கொள்ளவேண்டும்.

அதன் பிறகு மாவட்ட சமூக சேவையாளரினால் வழங்கப்பட்டு வரும் கண்ணாடி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனை முறையாகப்பூர்த்தி செய்து மாவட்ட சமூக சேவையாளர் மற்றும் நலப்பணியாளர் ஆகியோரின் பரிந்துரைகளும் பெறப்பட வேண்டும்.

பரிந்துரைகள் பெற்றுக் கொண்டதும் தங்களிடம் உள்ள கண் பரிசோதனை பற்றிய குறிப்புச் சீட்டினையும் இணைத்து தங்கள் பகுதி மண்டல அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் அல்லது மாவட்டசமூகசேவையாளரிடமோ, நலப்பணியாளரிடமோநேரடியாக ஒப்படைக்கலாம்.

கண்ணாடிக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் ஒழுங்குமுறைப் படியே கண்ணாடிகளும் வழங்கப்படும்.

வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சத்திர சிகிச்சை செய்துகொண்டோருக்கு முன்னுரிமை அடிப்படையிலும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



# தந்தை செல்வா



த.சபாரத்தினம்

தந்தை செல்வா மிகவும் அன்பான, பண்பான தந்தை.

ஐந்து பிள்ளைகள், அருமைக்கு. ஒரு பெண், நான்கு ஆண்கள். கடைக்குட்டி சந்திரகாசன்.

மார்ச் 28ல் தந்தை விழுந்த போது பிள்ளைகள் எவருமே தெல்லிப்பளை வீட்டில் இருக்கவில்லை.

மனைவி மட்டும் தான் இருந்தார்.

''இரத்தினம், இரத்தினம் என்று அடிக்கடி கூப்பிடுவீங்களே! இப்பொழுது கூப்பிடுங்கள்''

கதிரையிலிருந்து எழும்பும் போது விழுந்தவர்தான். அதன்பின்பு தந்தைக்கு நினைவு பூரணமாகத் திரும்பவில்லை.

மனைவியை மட்டுமல்ல, வேறு எவரையுமே அவர் வாய் திறந்து கூப்பிடவில்லை.

முப்பத்து நாலு நாட்களுக்கு தந்தைக்கு பூரணமாக உணர்வு வரவில்லை.

யாழ் பெரியாஸ்பத்திரியின் 16ஆம் வாட்டில் அந்த 34 நாட்களும் சாவுடன் போராடினார்.

கே. நடராசா அக்காலத்தில் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர். முதலில் டைம்ஸ் ஒப் சிலோனிலும், பின்பு டெயிலி நியூசிலும், அதன் பின்னர் சண்டே டைம்ஸிலும் வேலை செய்தவர். அவர் எழுதினார்:

''எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போராடப் பிறந்தவர். அவரின் ஆரம்ப வாழ்க்கை ஒரே போராட்டம். அவரின் அரசியல் வாழ்க்கையும் போராட்டம்தான். இப்பொழுது யமனுடன் போராடிக் கொண்டிருக்கிறார்'' என்று.

தந்தை செல்வா அறிவிழந்த நிலையில் யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செய்தி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் பரவியது.

யாழ்ப்பாணத்தில்...

மக்கள் கூட்டம் கூட்டமாக ஆஸ்பத்திரிக்கு வெளியே குழுமினர்.

கொழும்பில் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு செய்தி அறிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சரை அழைத்தார் அவர். சிறந்த நரம்பு வைத்திய நிபுணர் யார் எனக் கேட்டார்.

''டாக்டர் ஷெல்டன் கப்ரால்'' என்றார் சுகாதார அமைச்சர்.

டாக்டர் கப்ராலையும் அவரைச் சேர்ந்தவர்களையும் யாழ்ப்பாணம் அனுப்ப ஒழுங்கு செய்தார் ஸ்ரீமாவோ. விசேஷ விமானம் ஒன்றையும் தயார் செய்து கொடுத்தார்.

அன்றிரவே பலாலிக்குப் பறந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார் டாக்டர் கப்ரால். தந்தையின் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயை இரத்தக்கட்டி ஒன்று அடைத்து விட்டதை அவதானித்தார்.

சத்திர சிகிச்சை அடுத்த நாள் 24ம் திகதி அதிகாலை 3 மணிக்கு ஆரம்பித்தது.



1958ல் லண்டனில் தந்தை செல்வா இறங்கிய போது.

இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்தது.

அன்று காலையே கொழும்பு திரும்பினார் டாக்டர் கப்ரால். அவருக்கு உதவிய டாக்டர் மண்டலேஸ்வரன் கொழும்பு திரும்பவில்லை. யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தார். தந்தையின் நிலைமையைக் கவனிக்க.

26ம் தேதி மீண்டும் விசேஷ விமானம் மூலம் யாழ்ப்பாணம் போனார் டாக்டர் கப்ரால்.

''எப்படியிருக்கிறார் டாக்டர்?''

செல்வநாயகத்தின் மனைவி எமிலி கிரேஸ் டாக்டரைப் பார்த்து கேட்டார். அவரின் வீட்டுப் பெயர்தான் இரத்தினம்.

''பயப்படத் தேவையில்லை'' உடல் தேறி வருவதாக மண்டலேஸ்வரனும் மற்ற டாக்டர்களும் சொன்னார்கள்.

மார்ச் 31 தந்தையின் பிறந்த தினம்.

எழுபத்தொன்பதாவது பிறந்த நாள்.

யாழ்ப்பாணத்திலும் தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் மற்ற எல்லாப் பிராந்தியங்களிலும் தந்தை செல்வாவின் உடல் நிலை தேறக்கோரி வழிபாட்டு தலங்கள் யாவற்றிலும் விசேட பூசைகள், ஆராதனைகள், தொழுகைகள்.

சுவர்களில் பெரிய பெரிய சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

அவை யாவும் தந்தை செல்வா சுகமடையப் பிரார்த்தித்தன. வேண்டுதல் செய்தன.

ஏப்ரல் முதலாம் திகதி டாக்டர் கப்ரால் மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் போய் தந்தையைப் பரிசோதித்தார். இரத்தம் ஏற்றினால் தலைவரின் உடல் தேறுவது துரிதமாகும் என்ற அபிப்பிராயத்தை அவர் சொன்னார்.

எஸ்.ஜே.வி.யின் இரத்தம் ''ஓ'' குருப்பைச் சேர்ந்தது.

தந்தைக்கு இரத்தம் தேவை என்ற தகவல் தெரிய வந்ததும் வாலிபர்கள் படையெடுத்தனர் இரத்த வங்கிக்கு.

நீண்ட கியூ ''எல்லாரும் தேவையில்லை ''ஓ'' பிரிவு இரத்தமுள்ளவர்கள் மட்டும் நில்லுங்கள். மற்றவர்கள் போகலாம்'' நர்ஸ் ஒருவர் உரத்துக் கத்தினர்.

''எங்களுக்கு எங்கள் இரத்தம் எந்த குருப் என்று தெரியாது''

''அப்படியானால் நில்லுங்கள் முதலில் இரத்தத்தை குருப் பண்ண வேண்டும்.''

''இரத்தம் ஏற்றிய பின் தெம்பாகக் காணப்படுகிறார்'' என்று சொல்லிப் போட்டு கொழும்பு திரும்பினார் டாக்டர் கப்ரால்.

ஏப்ரல் 2ல் சிங்கப்பூரிலிருந்து விசேஷ மருந்து வந்து சேர்ந்தது. நாசித் துவாரத்தினூடாக அம்மருந்து கொடுக்கப்பட்டது.

தந்தையின் உடலில் சிறு சிறு அசைவுகள் ஊசி போட்டதும் சிறு உடலசைவு.

ஏப்பிரல் 3ம் திகதி சத்திர சிகிச்சையின் பின் போடப்பட்ட எட்டு இழைகளில் மூன்று வெட்டப்பட்டன.

ஐந்தாம் திகதி மீண்டும் அவருக்கு ''ஓ'' இரத்தம் கொடுக்கப்பட்டது. ஏப்ரல் 5ம் திகதி 'தினகரன்' ''எஸ்.ஜே.வி. தேறி வருகிறார்'' என்ற செய்தியை வெளியிட்டது.

ஆறாம் திகதி காலையில் கொழும்பிலிருந்து அரசியல் வாதிகள் குழு ஒன்று வருத்தம் பார்க்கப்போனது.

எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன, கல்குடா எம்.பி. கே. டபிள்யூ தேவநாயகம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், இ.தொ.க. செயலாளர் எம்.எஸ்.செல்லசாமி, சாவகச்சேரி முன்னாள் எம்.பி. வி. என். நவரத்தினம் அவர்களைத் தன் காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்.

குழாய்கள் பொருத்தப்பட்ட நிலையில் கிடந்த தந்தையைப்பார்த்ததும் ஜே.ஆர் உணர்ச்சி வசப்பட்டார். எஸ்.ஜே.வி.யின் மனைவியை அழைத்து ''நான் இரத்தம் கொடுக்கத் தயார்'' என்றார்

பக்கத்தில் நின்ற வி என். நவரத்தனம் 'நன்றி! எத்தனையோ இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள் இரத்த தானம் செய்ய'' என்றார்.

அன்று கோழிக்குஞ்சு சூப் தந்தைக்குக் கொடுக்கப்பட்டது.

ஏழாம் திகதி இரவு ஒரு திடீர் திருப்பம். சுவாசிக்க முடியாது கஷ்டப்பட்டார் தந்தை. நேர்ஸ்கள் டாக்டர் மண்டலேஸ்வரனை அழைத்தனர். நெஞ்சை அடைத்த சளியை வெளியே எடுத்து ஆபத்தைப் போக்கினார் டாக்டர் மண்டலேஸ்வரன்.

ஒன்பதாம்திகதி 'தினகரன்' பிரசுரித்த செய்தி இது.

தந்தை செல்வாவின் உடல்நிலை தேறி வருகிறது என்று டாக்டர்கள் கூறினர்.

''நாடித்துடிப்பும் இரத்த ஓட்டமும் சீரடைகின்றன'' என்று சொன்னார் டாக்டர் மண்டலேஸ்வரன்.

கடந்த சில நாட்களாக தொல்லை கொடுத்த சிறுநீரகமும் சிறப்பாக இயங்குகின்றது.

ஏப்பிரல் 10ல் அவரை படுக்கையில் தூக்கி உட்கார வைத்து திரவ உணவு கொடுக்க ஆரம்பித்தார்கள் டாக்டர்கள். பதினொராம் திகதி அவரை உட்கார வைத்து கால்களை மடக்கியும் கைகளை நீட்டியும் உடலின் வெவ்வேறு பகுதிகளை அமர்த்தியும் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தனர். பதார்த்த உணவின் அளவும் அதிகரிக்கப்பட்டது. டாக்டர்களுக்கு ஒரே உற்சாகம்.

பதினாறும் திகதி காலையில் டாக்டர், கப்ராலும், டாக்டர் குணசேகரவும் மீண்டும் எஸ்.ஜே.வி.யைப் பரிசோதித்தனர். எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்தனர். தலையில் இரத்தக் கட்டிகள் இருந்ததை அவதானித்தனர். அவற்றைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்ற முடிவுவாகியது.

## நாதஸ்வரம் இரசித்தார்

காலை 11 மணிக்குச் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு எஸ்.ஜே.வி.கொண்டு போகப்பட்டார். ஒன்றரை மணித்தியாலங்களுக்கு அவரின் தலையின் பின்புறத்தில் சிகிச்சை செய்யப்பட்டது. அந்த இரத்தக் கட்டிகள் தான் தந்தை மயக்கம் தெளிவதற்கு தடையாக இருப்பதாக டாக்டர்கள் சொன்னார்கள்.

ஏப்ரல் 23ல் இன்னுமொரு பரிசோதனையையும் டாக்டர்கள் செய்தனர். காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இசை டேப்புக்களைப் போட்டனர். தந்தை

(16-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# எதிர்பார்க்கிறது உலகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரச்சினை இவ்வளவு சிக்கல்படுவதற்கு முன்பே திரு வாஜ்பாய் அவர்களை அழைத்து மதுரையில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு நடத்தியவரும், ஈழத்தமிழ் மக்களின் இனப்படுகொலையைத் தடுக்கக் கோரி தமது பொதுச் செயலாளருடன், தாமும் தமது பதவியைத் துறந்தவருமான தமிழ்த்திரு கலைஞர் மு. கருணாநிதி அவர்களே இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருப்பதாலும், அவருடைய எதிரணியிலும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தீவிர ஆதரவுக்கொள்கையுடைய டாக்டர் இராமதாசு அவர்களும், வை.கோ. அவர்களும் முக்கிய பங்கு வகிப்பதாலும் இந்தத் தருணம் கிடைத்தற்கரிய தருணமாகும்.

### புலிகளைப் பேச்சுக்கு அழைத்திருக்கலாம்

மீண்டும் தமிழ்நாடு இலங்கை வாழ் தமிழ்ச் சகோதரர்களுக்காக ஒட்டு மொத்தமாகக் குரல் கொடுக்கவும், மத்திய அரசாங்கம் அத்திசையில் விரைந்து நடவடிக்கை எடுக்கவும் இது ஏற்ற தருணமாக இருப்பதால், அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையும் கிடைக்கும் நிலை இருப்பதால், இந்தியா-இலங்கை இரு பக்கத்திலுமுள்ள தமிழ்த் தலைவர்கல் இதைப் பயன்படுத்திக் கொண்டு இடைவிடாத போரினால் அழிந்து வரும் மக்களைக் காப்பாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அதே நேரம் சண்டை நிறுத்தம் ஏற்படாததற்கு விடுதலைப் புலிகள் மீது மட்டுமே பழிபோடுவது சரியல்ல. மக்கள் மீது சிறீலங்கா அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் அது தானே முன்வந்து போரை நிறுத்தி புலிகளைப்பேச்சுக்கு அழைத்திருக்கலாம். இந்த அம்சத்தையும் திரு ரிச்சர்ட்சன் சுட்டிக் காட்டியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

மேலும் திட்டமிட்டு நடத்தப்படும் ஒரு இனப்படுகொலைப் போரை உள்நாட்டுப் பிரச்சினை என்று அமெரிக்கா போன்ற ஒரு ஜனநாயக நாடு குறிப்பிடுவது நியாயமாகாது. ஏனென்றால் சிறீலங்கா சிங்களப் படைகள் தாக்குதல் நடத்துவது விடுதலைப் புலிகள் என்று அடையாளம் கண்டவர்களை மட்டுமல்ல; ஒட்டு மொத்தத் தமிழ் மக்களையுமாகும். அதனால் இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமுதாயம் முழுவதற்குமே இருக்கிறது. அம்முறையில்அமெரிக்காவுக்கும் உள்ள தென்பதைச் சொல்லத் தேவையில்லை.

அதேபோல''வன்முறைப் போக்கை புலிகள் கைவிட்டால் அவர்களுடன் சிறீலங்கா அரசு பேசத்தயார்'' என்று சிறீலங்காவின் தூதர் ஜெனீவாவில் சொன்னதும் பொருத்தமற்ற பேச்சாகும். ஏனென்றால் இந்தியாவின் தலையீட்டைத் தவிர்ப்பதற்காகவும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகத் தலைமை இருக்கக் கூடாது என்பதற்காகவும் புலிகளை ஆயுதங்களை வழங்கி வன்முறையாளர்களாக உருவாக்கியவர்களே சிறீலங்கா ஆட்சியாளர்கள் தாம் என்பது இப்போது நிருபணமாகி வருகிறது. இதில் ஜெயவர்த்தனா விலிருந்து அனைத்துச் சிங்களத் தலைவர்களுக்கும் பங்குள்ளது.


புலிகள் தங்கள் படையில் சிறுவர்களை ஏன் சேர்க்கிறார்கள்? இளைஞர்களை, பெரியவர்களை ஒன்றில் கொன்று குவித்தோ, அல்லது நாட்டை விட்டே ஓடும்படி செய்தோ சிறீலங்கா அரசு புரிந்து வரும் தமிழின ஒழிப்பின் எதிரொலியாகவல்லவா?

தமிழ்ப் பகுதியில் விவசாயம், தொழில், மீன்பிடி எதையும் செய்ய விடாமல் வான் வழி, தரைவழி, கடல்வழிக் குண்டு மாரி பொழிந்து கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு, அங்கே உணவுப் பொருள்களையும் அனுப்பாமல் தமிழ் மக்கள் பட்டினியால் சாகவும், மருந்துகளையும் அனுப்பி வைக்காமல் தொத்து நோய்களால் மாளவும் செய்து கொண்டே ''போதிய அளவுக்கு அனுப்புகிறோம். இருப்பில் உள்ளது'' என்று சொல்வது உலகை ஏமாற்றுவதேயாகும்.

இந்த ஏமாற்றையும், சிறீலங்கா அரசு ஒப்புக்குப் போடும் சமாதான நாடகத்தையும் முடிவுக்குக் கொண்டு வர, இலங்கைத் தமிழ் மக்கள் திட்ட மிட்ட இனப் படுகொலையிலிருந்து காப்பாற்றப்பட இந்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறோம்.

இந்தியாவில் கட்சிப் பிரதி கட்சி வாதங்கள் எப்படியிருந்தாலும் அண்டை நாட்டில் அழிவின் விளிம்பில் உள்ள சகோதர மக்களை உயிர் பிழைக்க வைக்க ஒன்றுபட்டு ஆதரவு நல்க வேண்டும் என அனைத்து தமிழக, இந்திய கட்சிகளையும் அமைப்புகளையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

-தமிழீழதாசன்



தாயகத்தில் சொத்து சுகத்தோடு தோட்டம் துரவோடு வாழ்ந்த இலங்கைத் தமிழ் மக்கள், இன்று அகதியாக பத்துக்குப் பத்து அளவுள்ள குடிசையில் பாரிய துன்பங்களிடையே வாழ்வது சிறைவாழ்வு போன்றது தானே!

# தந்தை செல்வா...

யின் கைவிரல்கள் தாளம் போடுவது போன்று சிறிதளவு அசைந்தன. அடுத்த நாள் 24ம் திகதி மேலுமொரு முன்னேற்றம். நாதஸ்வரஇசையை ரசிப்பது போன்ற முகபாவங்கள். நிமிர்த்தி இருத்தி வைத்தனர். கண் விழித்துப் பார்த்தார்.

இருபத்தைந்தாம் திகதி இரவு கடும் காய்ச்சல் கண்டது.

இருபத்தாறு இரவு 8.30 மணிக்கு மாரடைப்பு.

இரவு 10மணிக்கு இறந்து விட்டார்.

எல்லா முயற்சிகளும் - எல்லாவித கவனிப்புகளும் - பிழைத்துப்போயின.

''இரவு பகலின்றி ஒரு மகன் தன்தந்தைக்கு ஆற்றும் சேவையைவிடச் சிறப்பான சேவையை ஆற்றிய வைத்தியர்களும் அவர்கள் உதவியாளர்களும்'' உண்மையிலேயே இடிந்து போயினர்.

### கதறி அழுதார்கள்

டாக்டர்களும் அழுதார்கள். அவர்களின் உதவியாளர்களும் விம்மி விம்மி அழுதார்கள். தமிழ் பேசும் மக்கள் அனைவருமே சேர்ந்து அழுதார்கள். கதறி அழுதார்கள்.

மகன் சந்திரகாசன் தந்தையின் பூதவுடலை கையேற்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் கையளித்தார்.

தன்னிலும் பார்க்க, தான் கட்டி எழுப்பிய கட்சியை, இயக்கத்தை நேசித்தவர் தந்தை செல்வநாயகம்

1975 பெப்ரவரி 6ல் காங்கேசன்துறை உபதேர்தலில் வெற்றியீட்டிய போது அவரைப் பாராட்டித் தீர்மான மொன்றை நிறைவேற்ற விரும்பினார்கள் இளைஞர்கள்.

அவர்களை அழைத்து தந்தை சொன்னார்.

''தனிப்பட்ட எவரையும் நீங்கள் போற்ற வேண்டாம். எமது கட்சியை எமது இலட்சியங்களை போற்றுங்கள்; புகழுங்கள். அவை தான் நிலையானவை. தனிப்பட்ட எவரும் நிலையானவர் என்று கூறமுடியாது.

வழக்கம் போல ஆறுதலாக, தணிந்த குரலில், ஒவ்வொரு சொல்லாக அழுத்தி, உறுத்தித்தான் சொன்னார்.

வழக்கமாக அவர் சொற்களில் இருக்கும் உறுதி இருந்தது. ஆணித்தரம் இருந்தது. அவருக்கேயுரிய விடாப்பிடியும் ஆழமாகப் பதிந்திருந்தது.

1975 ஜனவரியில் நடந்த சம்பவம் இது.

யாழ்ப்பாணத்தில் நாலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்துகொண்டிருந்தது. தமிழ் நாட்டிலிருந்து வந்து கலந்துகொண்டவர்களில் இரா. ஜனார்த்தனனும் ஒருவர். மகாநாட்டின்போது அவர் தந்தை செல்வாவை அவருடைய தெல்லிப்பளை வீட்டில் போய்ச் சந்தித்தார்.

சந்திப்பின் முடிவில் ஜனார்த்தனன் கேட்டார்.

''ஐயா! தங்களுக்கு வயதாகிவிட்டது. உங்கள் சுயசரிதையை நீங்கள் எழுத வேண்டும்'' என்று.

பக்கத்தில் நின்ற உடுவில் எம்.பி. தர்மலிங்கத்திடம் 'செல்வா' சொன்னார்.

''நீங்கள் வெளியிட்ட மலரில் ஒரு புத்தகத்தைக் கொண்டு வாருங்கள்!

தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரின் ஒரு பிரதியைக் கொண்டு வந்து கொடுத்தார் தர்மலிங்கம்.

தந்தை தனது கதிரையிலிருந்து எழுந்தார். மலரை இரண்டு கைகளிலும் பிடித்து ''இந்தாருங்கள். இதுதான் என் சுயசரிதை'' என்று சொல்லியபடி மலரைக் கொடுத்தார்.

(தொடரும்)

# அனைவருக்குமான கல்வி தொடர்பான அறிவித்தல்

### கல்வி வாய்ப்புகள் பற்றிய மலர்

இவ்வாண்டு பன்னிரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு எழுதி உயர்கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு காத்திருக்கும் மாணவர்கள் தங்களுக்கு ஆர்வமுள்ள துறைகளைப் பின்பற்றுவதற்கு உதவியாகவும், ஏனைய மாணவர்கள் மற்றும் கல்வி தொடர ஆர்வமாக இருப்போர் அனைவரும் பயன் பெறுவதற்கு மிக உதவியாகவும் விளங்கும் 'மாணவர் மலர் 1998' என்ற பெயரைக் கொண்ட ஓர் விபர மலரினை ''தினமணி'' பத்திரிகை தனி நூலாக வெளியிட உள்ளது.

இந்நூல் 'மே மாதம்' முதல் கிழமையில் வெளிவரவுள்ளது. முகாமிற்கு பத்திரிகைகள் மற்றும் வார இதழ்கள் வாங்கப்படும் விற்பனையாளர்களிடம் முன் அறிவித்தல் கொடுத்து ஓர் பிரதி வாங்கிட முன்பதிவு செய்வது உதவியாக இருக்கும். ஒவ்வொரு மண்டல அலுவலகமும் மாவட்ட சமூக சேவையாளரும் ஓர் பிரதியினை வாங்கினால் மாணவர்களுக்கான சரியான ஆலோசனைகள் வழங்க இது உதவியாக இருக்கும்.

மாணவர் மன்றங்களும் உயர்கல்வி கற்க விரும்புவோரும் இதனை வாங்கலாம். மேலும் ஏப்ரல் 18 முதல் கிழமை தோறும் ''இளைஞர் மணி'' என்ற இணைப்பு மலரும் தினமணி பத்திரிகையுடன் சனிக்கிழமை தோறும் வழங்கப்படும்—இவற்றையும் மாணவர்களும், இளைஞர்களும் வாசிப்பது மிக உதவியாக இருக்கும்.

### உயர் கல்வி அனுமதி தொடர்பான அறிவித்தல்

பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களின் விபரங்களைச் சேகரிப்பதற்கும் அவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் பற்றி அறியத்தருவதற்குமான உயர் கல்வி அனுமதி விபரப் படிவமும் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புத் தொடர்பான அறிவித்தல் தாளும் அவரவருக்கு அனுப்பப்படுகின்றது. பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வெழுதிய அனைவரும் மேற்குறிப்பிட்ட படிவத்தினை பூர்த்தி செய்து அனுப்பி வைத்திட வேண்டும்.

### குறிப்பேடு வழங்கல் தொடர்பான நினைவூட்டல்

மேலும் அடுத்த கல்வியாண்டிற்கான குறிப்பேடுகள் வழங்குவதற்கான மாணவர் விபரங்கள் இம்மாத இறுதிக்குள் சேகரிக்கப்பட்டு கழக மண்டல அலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பதை நினைவுறுத்த விரும்புகின்றோம். குறிப்பேடுகளைக் குறித்த நேரத்திற்குள் வழங்க இது முக்கியமானது.

இப்படிக்கு,
கல்வி பகுதி,
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்
11-4-1998

Edited. Printed, Published and Owned by ARUNACHALAM GOPALAN, No. 14, Sait Colony 1st Street, Egmore, Chennai-600008
Printed at Kuralneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை